ISSN 1391-9504

PUBLIC LIBRARY
JAFFNA

Vijey விஜய்

# விஜய்

09.10.2013 - மலர் 10, இதழ் 32



ஆழ்கடலில் கணக்கெடுப்பு




Google இன் 15 ஆவது பிறந்தநாள்



## கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும்



## சமிக்ஞைகளை தெரிந்துகொள்வோம்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## குற்றவாளியான எஹலப்பொல

பாக்கு வர்த்தகத்தை மேற்கொள்ள இந்தியாவில் இருந்து வர்த்தகர் ஒருவர் சப்ரகமுவைக்கு வந்தார். அவரின் பணத்தை எஹலப்பொல மோசடி செய்தான். அந்த வர்த்தகர் மன்னனிடம் இதுகுறித்து முறைப்பாடு செய்தார். அதனால், கண்டிக்கு வரும்படி எஹலப்பொலைக்கு கட்டளையிட்டார் மன்னர். இதற்கு முன் இரு கோறளைமார்களைக் கத்தியால் குத்திக் கொன்றதாக அவர் மீது குற்றச்சாட்டு இருந்தது. இதனால் தமக்கு முன்னால், பல்லக்கில் வரக்கூடாது என கட்டளையிட்டு எஹலப்பொலைக்கு மன்னர் செய்தி அனுப்பியிருந்தார். அப்பொழுது பல்லக்கில் வந்த எஹலப்பொலை மற்றொரு பிரதானியின் உதவியுடன் மன்னனிடம் இருந்து தப்பித்துக்கொண்டான்.


இந்த முறை மொல்லிகொட எனும் இரண்டாம் மகா பிரதானி மன்னனுக்கு சார்பாக இருப்பது எஹலப்பொலைக்குப் பாதகமாய் அமைந்தது. இம்முறை ஏதாவது விபரீதம் நடக்கலாம் என எஹலப்பொலை எண்ணினான். அதனால், வரமுடியாத நிலையில் உள்ளேன் என்ற தகவலை மன்னனுக்கு அனுப்பி வைத்தான். எஹலப்பொலை வருகை தராததால் மன்னன் பெருஞ்சினம் கொண்டு அவனைப் பதவியில் இருந்து இறக்கினார். எஹலப்பொலை மன்னனின் மாளிகைக்கு வரும் வரையில் அவனின் மனைவியையும் பிள்ளைகளையும் பணயமாகப் பிடித்து வைத்துக்கொண்டான். மொல்லிகொட முதலாம் பிரதானியாகப் பதவி உயர்வு பெற்றான். எஹலப்பொலை 'டொய்ல்' என்பவருடன் அடிக்கடி கடிதத் தொடர்புகளை வைத்துக்கொண்டான். கி.பி 1814 ஜனவரி மாதத்தில் அவன் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பித்தான். சப்ரகமுவ திசாவனியை ஆங்கிலேயரின் பாதுகாப்பில் வைப்பதாகவும் உறுதி அளித்தான். எனினும், ஆள்பதி பிரௌன்றிக் அதனை விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk



# ஆழ்கடலில் ஒரு கணக்கெடுப்பு





## 120,000 கடல்வாழ் உயிரின வகைகள் கண்டுபிடிப்பு


'உலக கடல்வாழ் உயிரினங்களின் கணக்கெடுப்பு' (Global Marine Life Census) பற்றிய விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. சுமார் ஒரு தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட இக்கணக்கெடுப்பின் காரணமாக, இருள் சூழ்ந்த ஆழ்கடலிலிருந்து சற்றும் எதிர்பாராதளவுக்கு பல்வேறு விசித்திர உருவங்களைக் கொண்ட பெருந்தொகையான புதிய உரினங்களைக் கண்டுபிடிக்கும் வாய்ப்புக் கிட்டியது. உலக கடல்வாழ் உயிரின தொகை மதிப்பீட்டகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டின்படி, உலக சமுத்திரங்களில் மில்லியனுக்கும் அதிகமான உயிரின வகைகள் வாழ்வதாகத் தெரியவந்துள்ளது.




இந்த கணக்கெடுப்பிற்காக உலகளாவிய ரீதியில் 670 விஞ்ஞான நிறுவனங்களில் இருந்து 2,700 விஞ்ஞானிகள் இணைந்து செயல்பட்டனர். அவர்கள் இதுவரை 9,000 தினங்கள் கடலில் பயணித்து 540 இற்கும் மேற்பட்ட கடல் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு 120,000 கடல்வாழ் உயிரின வகைகளைக் கண்டுபிடித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். 21 ஆம் நூற்றாண்டில் ஏற்படும் மாற்றங்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கு எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனைக் கண்டுபிடிப்பதே இத்தகைய மதிப்பீடுகளின் பிரதான நோக்கமாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், அந்த உயிரின வகைகளில் இதுவரை கால்பங்கு மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் முக்கால் வாசி உயிரின வகைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.







### 6,000 புதிய உயிரின வகைகள்

650 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது, 470 மில்லியன் யூரோ செலவில் சர்வதேச மட்டத்தில் இக்கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதன் ஆரம்ப கட்டக் கணக்கெடுப்பின்போது மட்டும் சுமார் 6,000 இற்கும் மேற்பட்ட புதிய கடல்வாழ் உயிரின வகைகளை கடல்வாழ் உயிரின ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருந்தனர். மேற்படி கணக்கெடுப்பின் படி, இதுவரை 16,764 மீன் வகைகளின் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், 5000 மீன் வகைகளின் தகவல்களை சேகரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பயனுள்ள ஆய்வுகள்

இக்கணக்கெடுப்புக் குழுவின் தலைவராக அவுஸ்திரேலியரான இயன் பொய்னர் திகழ்கின்றார். இந்த கணக்கெடுப்பு குறித்து அவர் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது; "ஆழ்கடலில் நாம் இதுவரை கண்டுபிடித்த, கண்டுபிடிக்காத உயிரின வகைகள் குறித்து பல பயனுள்ள தகவல்களை சேகரித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இன்னும் கண்டுபிடிக்கப்படாத ஏறக்குறைய 750,000 இற்கும் மேற்பட்ட உயிரின வகைகள் குறித்த தகவல்களை வெளியிடவேண்டியுள்ளன" என்றார்.

இரஞ்சித் ஜெயகர்

Hotel Green Grass
Kids Birthday Party
Special Offer
Snacks, Juice & Dinner
Kids Games
Within 15 pax 15000/-
30 pax 25000/-
50 pax 35000/-
Call us: 021 222 1686, 021 222 4385, 077 780 3210
33,Aseervatham Lane, hospital Road, Jaffna.
E.mail: greengrassjaffna@gmail.com
web: www.jaffnagreengrass.com

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப் பயிற்சி/உரையாடல் வீடியோ சீடி - 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று தமிழ் மூலம்.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று / மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/= மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 081-2227711 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவர் குற்றம்

ஒரு மடாலயத்தில் நான்கு துறவிகள் மௌன விரதம் பூண்டு தியானத்தில் அமர்ந்தார்கள். யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது என்ற வாக்குறுதிக்குப் பின்னர்தான் அவர்கள் அவ்வாறு அமர்ந்தார்கள்.

நால்வருக்கும் நடுவில் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. அங்கே பரிபூரண அமைதி நிலவியது. மெழுகுவர்த்தி கரைந்துகொண்டிருந்தது. சிறிது நேரம் சென்றது. முழுவதும் உருகிய மெழுகுவர்த்தி அணையும் நிலையில் படபடத்தது.

அதைக் கவனித்த ஒரு துறவி "மெழுகுவர்த்தி அணையப் போகிறது" என்று தன்னை மறந்து பேசிவிட்டார்.

"நாம் பேசவே கூடாது என்பதை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டார் இன்னொரு துறவி.

"ஏன் இப்படி சளசளவென்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? சும்மா இருக்க மாட்டீர்களா?" என்று கோபப்பட்டார் மூன்றாவது துறவி.

"ஹா...ஹா... எதுவுமே பேசாமல் இருப்பது நான் மட்டுமே!" என்று தன்னைத்தானே புகழ்ந்துகொண்டார் நான்காவது துறவி.

மற்றவர்களைக் குற்றம் சாட்டும்போது தன் குற்றத்தை எல்லோரும் மறந்துவிடுகிறார்கள் என்பதை இக்கதை உணர்த்துகிறதல்லவா?

# தன்னடக்கம்

கேசவனும் ராமுவும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள். கேசவன் நன்கு படிப்பான். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனால், எப்போதும் செருக்குடன் பேசி, நடந்துகொள்வான். ராமு சுமாராகப் படிக்கக்கூடியவன். ஆனால், மிகவும் பண்போடு நடக்கக்கூடியவன். மேலும், ராமு கிரிக்கெட் விளையாட்டில் மாவட்ட அளவில் சிறந்த பந்துவீச்சாளன் என்று பெயர் எடுத்தவன். பாடசாலையின் கிரிக்கெட் அணிக்கும் அவன்தான் தலைவனாக இருந்தான். ஆனால், மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

அன்று வகுப்பறையில் ஆசிரியர் அந்த மாதப் பரீட்சைக்குரிய விடைத்தாள் மதிப்பெண்களை அறிவிக்க ஆரம்பித்தார். எப்போதும் போல கேசவனே அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருந்தான். ராமுவோ அறுபது மதிப்பெண்களை மட்டும்தான் பெற்றிருந்தான்.

கேசவன், அதிக மதிப்பெண்களைப் பெற்றுவிட்டதால், தன்னைவிடக் குறைவான மதிப்பெண்களைப் பெற்ற பிற மாணவர்களைக் கேலியும் கிண்டலும் செய்துகொண்டிருந்தான். இதைக் கவனித்த ராமு, கேசவனிடம் போய், "கேசவா, நீ நிறைய மதிப்பெண்கள் பெற்றுள்ளாய். வாழ்த்துக்கள்! ஆனால், அதற்காகப் பிறரை இழிவாகக் குறைத்து மதிப்பிட்டுப் பேசாதே" என்றான்.

"நான் நன்றாகப் படித்ததால் நல்ல மதிப்பெண்கள் பெற்றுப் புகழ் பெற்றிருக்கிறேன். என்னால் இந்தப் பாடசாலைக்குத் தானே பெருமை! இதைப் புரிந்துகொள்" என்று ஆணவத்துடன் பதில் கூறினான் கேசவன்.

"கேசவா பாடசாலையால்தான் உனக்குப் பெருமை. உன்னால் பாடசாலைக்குப் பெருமை என்று சொல்லாதே!" என்று ராமு கூறினான்.

"என் வசதிக்கு இங்கு நான் படிப்பதே, இந்தப் பாடசாலைக்குப் பெருமைதானே!" என்று கேசவன் மீண்டும் கூறினான். ராமு அமைதியாகிவிட்டான்.

அந்த ஆண்டின் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அனைத்துப் பாடசாலைகளும் அதில் கலந்துகொண்டன. இறுதிப்போட்டியில் அனைவரும் எதிர்பார்த்தபடியே ராமு தலைமையிலான அந்தப் பாடசாலையின் கிரிக்கெட் அணி வெற்றி பெற்றுக் கோப்பையைக் கைப்பற்றியது. ராமுவுக்கு வாழ்த்துக்கள் குவிந்தன. கேசவனுக்கு ராமு இவ்வாறு புகழடைவது பொறுக்கவில்லை. மனதுக்குள் பொருமிக்கொண்டிருந்தான்.




அதேவேளை, ஊர் பெரியவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எல்லோரும் கலந்துகொண்ட விழா ஒன்று நடைபெற்றது. அனைவரும் அதில் உரையாற்றிய பின்னர் ராமு பேச ஆரம்பித்தான். "எல்லோரும் என்னால்தான் நமது அணி வெற்றி பெற்றது என்று கூறுகிறார்கள். இது தவறு; இது எங்கள் அணியின் கூட்டு முயற்சி. நாங்கள் பயிலும் பாடசாலைக்கு எங்களால் முடிந்த சிறு நற்பெயர். அவ்வளவுதான். இந்த வெற்றி, எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பாராட்டுகள், கோப்பை எல்லாம் இந்தப் பாடசாலையால்தான் எங்களுக்குக் கிடைத்தது! இதை யாரும் மறுக்க முடியாது!" என்று பேசி முடித்தான் ராமு. ராமுவின் அடக்கமான, பணிவான பேச்சைக் கேட்டுக் கேசவன் தலைகுனிந்து நின்றான்.

# மனதில் ஊனமில்லை

ஒரு சிறிய நகரத்தில் பாலன் என்ற சிறுவன் தனது குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்தான். அவனது அப்பா, அவனுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டார். பாலனோ உடல் ஊனமுற்றவன். அவனுக்கு வயது 13 ஆனபோது பணம் சம்பாதிக்க விரும்பினான். ஆனால், எவ்வாறு என்பது தெரியவில்லை.

அவனுக்கு ஒரே ஒரு நண்பன் மட்டுமே இருந்தான். அவனுடைய பெயர் மதன். ஒருநாள் மதனின் தங்கை பானு, பாலனைப் பார்த்து, "வேலைக்குப் போகத் தெரியாத ஜடம்" என்று கேலி செய்தாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மதன், "அவனுடைய கால் ஊனமாக இருந்தாலும் அவனது மனதில் ஊனமில்லை. இவ்வாறு அடுத்தவர் மனதைப் புண்படுத்துவது தவறு" என்று தங்கையைக் கடுமையாகக் கண்டித்தான்.

மறுநாள் காலை, பாலன் அந்த நகரத்திலிருந்த பேருந்து நிலையத்துக்குச் சென்றான். அங்கே பலவித கார்கள் நிற்பதைக் கண்டான். அவற்றைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. வீட்டுக்குச் சென்று, ஒரு காகித அட்டையை எடுத்து அதில், 'இங்கே வாகனங்கள் சுத்தம் செய்து தரப்படும்' என்று எழுதினான். அந்த அட்டையை எடுத்துச் சென்று பேருந்து நிலையத்திலிருந்த ஒரு கம்பத்தில் தொங்க விட்டான்.



சிலர் வாகனங்களை அந்தப் பக்கமாக நிறுத்திவிட்டுக் கடைகளுக்குச் சென்றனர். அவர்கள் திரும்பி வருவதற்குள் அந்த வாகனங்களை மதனின் உதவியோடு பாலன் நன்றாகத் துடைத்து சுத்தம் செய்து வைத்தான். வாகனங்களை நிறுத்திவிட்டுச் சென்றவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது, தங்கள் வாகனங்கள் சுத்தமாகத் துடைக்கப்பட்டு பளிச்சென்று இருப்பதைப் பார்த்து வியந்து போனார்கள்.

ஒருவர் அங்கு நின்றுகொண்டிருந்த மதனைப் பார்த்து, "தம்பி, இந்த வாகனங்களை யார் துடைத்து வைத்தது?" என்று கேட்டார். அதற்கு மதன், "என் நண்பன் பாலன்தான் உங்களது வாகனங்களைக் கஷ்டப்பட்டுத் துடைத்து வைத்தான்" என்றான். அதைக் கேட்ட அவர் பாலனைப் பார்த்து, "தம்பி உன் கால் ஊனமாக இருந்தாலும் உன் மனதிலும் உன் நல்ல நட்பிலும் ஊனமில்லை" என்று கூறியபடியே வாகனத்தைக் கழுவியதற்கு கூலியாக சிறிது பணத்தைக் கொடுத்தார்.


இந்த தொழிலை தொடர்ந்து செய்யவே பாலனுக்குத் தேவையான பணம் கிடைக்க ஆரம்பித்தது. தனது தாயை இனிமேல் கஷ்டப்படாமல் காப்பாற்றலாம் என்று நினைத்துக்கொண்டான். மேலும், தனக்கு உதவி புரிந்த மதனை மனமார பாராட்டி மகிழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் உயிரினங்கள்...?

## கிடைத்த சான்றுகளும் தொடரும் ஆய்வுகளும்

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தற்போதளவில் செவ்வாயில் தரையிறங்கியுள்ள கியூரியோசிட்டி தளவூர்தியானது நாளுக்கு நாள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய, செவ்வாயில் உயிரினங்கள் குறித்து இதுவரை வெளியான சில தகவல்களை இங்கு நோக்குவோம்.



### அதிகளவு 'பொஸ்பேட்'

செவ்வாய் கிரகத்தில், பூமியில் உள்ளதைவிட, அதிக அளவில் பொஸ்பேட் தாது காணப்படுவதாக ஆய்வு ஒன்றின்மூலம் தெரிய வந்துள்ளது. உயிரினங்கள் வாழத் தேவையான முக்கியமான தாதுக்களில் பொஸ்பேட்டும் ஒன்றாகும். இதன்படி பார்க்கும்போது, பூமியைப் போலவே செவ்வாயிலும் உயிரினங்கள் இருக்கலாம் என்ற வாதத்திற்கு இது நம்பிக்கையூட்டுவதாகவும் வலுவூட்டுவதாகவும் உள்ளது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.






இது தொடர்பாக, நிவேதா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், செவ்வாய் கிரகத்தில் தாதுக்கள் அதிக அளவில் உள்ளன என்றும் கிட்டத்தட்ட பூமியைப் போலவே இங்கும் தாதுக்கள் அதிகம் உள்ளன என்றும் அதிலும் பூமியை விட, இங்கு எளிதாகக் கரையும் நிலையிலேயே இவை உள்ளன என்றும் தெரியவந்துள்ளது. குறிப்பாக, பூமியில் உள்ள பாறைகளிலிருந்து வெளியாவதைவிட, 45 சதவீதம் அதிகமான பொஸ்பேட், செவ்வாயில் உள்ள பாறைகளிலிருந்து வெளியாகின்றதாம்!

### உயிரினங்கள் வாழத் தகுதியற்ற கிரகம்

உயிரினங்கள் வாழ மெத்தேன் வாயு அவசியமாகும். அதில்தான் கார்பன், ஹைட்ரஜன் அணுக்கள் உள்ளன. இவையே உயிரினங்கள் வாழ்வதற்கான மூலக்கூறு ஆகும். செவ்வாயின் வளிமண்டலத்தில் மெத்தேன் வாயு உள்ளதா? என கியூரியோசிட்டி தளவூர்தி அண்மையில் ஆய்வொன்றை மேற்கொண்டது. ஆனால், மெத்தேன் இருப்பதற்கான அறிகுறிகளை அங்கு கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது சாத்தியமில்லை என்று அண்மையில் செய்தியொன்று வெளியாகியிருந்தது. ஆனால், ஒரு காலத்தில் உயிரினங்கள் வாழ்ந்ததாகவும் பெரிய ஆறுகள் ஓடியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் கியூரியோசிட்டி முன்னர் அனுப்பி வைத்த படங்களூடாகத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






### வெள்ளப்பெருக்கு

இதேவேளை, கியூரியோசிட்டி தளவூர்த்தியானது, செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பிலுள்ள பண்டைய நதிப் படுக்கையின் ஒரு பகுதியான 'ஹொட்டாஹ்' (Hottah) எனும் பிரதேசத்தைக் கண்டுபிடித்துப் புகைப்படங்களை அனுப்பியுள்ளது. அவற்றை ஆராய்ந்ததில், செவ்வாயில் பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதற்கான சான்று கிடைத்துள்ளது. இது செவ்வாயில் நீர் இருப்பதற்கான முக்கிய சாத்தியக்கூற்றைத் தோற்றுவித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### செவ்வாயில் நீர்


அத்துடன், மிக அண்மையில் கியூரியோசிட்டி தளவூர்தி செவ்வாயில் சேகரித்த மண் மாதிரிகளை ஆராய்ந்தபோது, அவற்றில் குறிப்பிடத்தக்க அளவு நீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செவ்வாயின் செந்தூசியில் 2% நீர் இருப்பதாக கியூரியோசிட்டி ஆய்வாளர் லோரி லெசின் மற்றும் அவரது குழுவினர்கள் கூறியுள்ளனர். இது எதிர்கால விண்வெளி வீரர்களுக்கு மிகவும் பயனுள்ள தகவலாக இருக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அவசியமானதைத் தெரிவுசெய்து கற்றுக்கொள்ள வேண்டும்



மாணவரொருவர், மாணவப் பருவத்தில்தான் அறிவையும் தேடலையும் உச்சக் கட்டத்தில் பிரயோகிக்கவும் அதனைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும்போது, அந்த மாணவர் தனக்கு அவசிமானதை மட்டுமே பெற முயற்சிக்க வேண்டும்.

தேவை, விருப்பம் என்பனவற்றுக்கு அமையவே நாம் கல்வியைக் கற்றுக்கொள்கிறோம். எனினும், எமக்கு அவசியமான விடயங்கள் எதுவோ, அவற்றையே எமது தேவையாக முடிவுசெய்துகொள்ள வேண்டும். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களும் அறிந்துகொள்ளவேண்டிய




விடயங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இருப்பினும், நமக்குப் பயன் கிடைக்காத எந்த ஒரு விடயமாக இருப்பினும், அதில் நமது நேரத்தை செலவழிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் பாடசாலை செல்லும் அதேவேளை, பெரும்பாலானவர்கள் எல்லாப் பாடங்களுக்காகவும் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்வதை தற்போது வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வது தவறன்று. ஆனால், அவ்வாறு செல்லும்போது நேரம், உடல், சக்தி என்பன வீணடிக்கப்படுகின்றன. ஆகவே, அந்த நேரத்தை அத்தியாவசியமான பாடங்களுக்கு மாத்திரம் செலவழிப்பதனால், உரிய பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கற்றலைப் பொறுத்தவரையில், நாம் கற்க வேண்டிய பாடங்களில், எந்தப் பாடங்கள் அவசியமானது எனத் தெரிவு செய்து கற்க வேண்டும். இதன் மூலம் அவசியமான பாடத்தை சரியாகக் கற்கவும் நேரத்தை மிகவும் சிறப்பாக முகாமைத்துவம் செய்யவும் முடியும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



'விஜய்' நடத்திய சைக்கிள் வெற்றியாளர் போட்டியில், இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் பி.ஜெயரூபனுக்குரிய சைக்கிள் பரிசினை 'விஜய' நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளை அதிகாரிகள் வழங்கி வைப்பதையும் அருகில் பாடசாலையின் அதிபர் மற்றும் மாணவனின் தகப்பனார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரும் புரிந்துகொள்ளும் சமிக்ஞைகள்

தொடர்பாடலில் மொழியானது, முக்கிய பங்கினை வகிக்கின்றது. உலகம் பூராகவும் ஏராளமான மொழிகள் பேசப்படுகின்றன. மொழிமூலம் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டியவர், மொழியினை அறிந்திருந்தால் மாத்திரமே தொடர்பாடலை மேற்கொள்ள முடியும். ஆனால், மொழியினால் செய்ய முடியாத ஒரு காரியத்தை சமிக்ஞைகள்மூலம் செய்ய முடியும்.

நாடு, இனம், சமயம் என எதுவுமே தடையாக அமையாத வகையில் எந்தவொரு தகவலையோ, அறிவிப்பையோ, அறிவுறுத்தல்களையோ தெரிவிப்பதற்கு, பல்வேறு சமிக்ஞைகள் பயன்படுகின்றன. அத்துடன், கொடி, போக்குவரத்து சமிக்ஞை ஆகியனவும் இவ்வாறான சமிக்ஞைகளில் அடங்குகின்றன. இவ்வாறான சமிக்ஞைகள் இல்லாமல் தொடர்பாடலை மேற்கொள்வது மிகவும் கடினமாகும். ஆண், பெண் வேறுபாடுகளை உணர்த்தல், ஒன்றை இனங்காணச் செய்தல், அறிவுறுத்தல்களை செய்தல், சமூகத்திற்கான தகவல்களை வழங்கல் போன்ற விடயங்களிலும் சமிக்ஞைகளின் பங்களிப்பு இன்றியமையாததாகவே உள்ளது.

மேற்படி சமிக்ஞைகளுக்கு சர்வதேச அங்கீகாரத்துடனான நிறம், வடிவம், அளவு ஆகியன வழங்கப்படுகின்றன. விஞ்ஞான ஆய்வுகூடம், காலநிலை அவதான நிலையம் ஆகிய முக்கியமான இடங்களிலும் மற்றும் தொழிற்கூடங்களிலும் பல்வேறு சமிக்ஞைகள் பயன்பாட்டில் உள்ளன. எனவே, சமிக்ஞைகள் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவையாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆபத்திற்கு ஆளாகாமல் தம்மைக் காத்துக்கொள்வதற்கும் மேலும் செல்லவேண்டிய இடத்தை, பாதையை அறிந்துகொள்வதற்கும் சமிக்ஞைகள் பயன்படுகின்றன.

நிறுவனமொன்றிற்குள் உள்நுழைதல், வாகனங்களை நிறுத்தல், நிறுவனத்தில் பெறவேண்டிய சேவைகள் குறித்தான அறிவுறுத்தல்களைப் பெறவும் சமிக்ஞைகள் துணை நிற்கின்றன எனலாம். இவ்வாறே, நாம் அன்றாட தேவைகளில் கொள்வனவு செய்கின்ற உணவு வகைகள், சவர்க்காரம், சலவைத் தூள்கள் ஆகியனவற்றில்கூட, பல்வேறு வகையிலான அடையாளங்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவற்றை உரிய வகையில் பாவனையாளர்கள் எவ்வாறு பயன்படுத்துவதென்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காகவே இவ்வாறு சமிக்ஞைகள் அதில் இடம்பெறுகின்றன. மேலும், வீதியில் செல்லும்போது வீதியோரங்களில், கனரக ஊர்திகளில், டிரான்ஸ்ஃபோமர்களில், பாடசாலை,மருத்துவமனை போன்ற பொது இடங்களில்கூட இத்தகைய சமிக்ஞைகளை நாம் காணலாம்.





## பாதுகாப்பிற்காக


தலைக்கவசம்


மூக்குக்கண்ணாடி


கையுறை



காது பாதுகாப்பு


முக பாதுகாப்பு



பாதுகாப்பிற்காக
கண்களைக் கழுவும் இடம்



அவசரத்தின்போது
சுத்தப்படுத்திக்கொள்ளும் இடம்


ஆபத்தின்போது
ஒன்றுகூடும் இடம்


அவசர வெளியேறும்
வழி


இவ்விடம் வழுக்கும்


வெப்பமான மேற்பரப்பு





ஆபத்தானது-கவனம் தேவை


மின்சாரத்திலிருந்து
பாதுகாத்துக்கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபத்தை உணர்த்தும் சமிக்ஞை (Warning Sign)

உடல் ஆரோக்கியத்திற்கு ஆபத்தானது அல்லது ஏதேனும் விபத்துக்கள் ஏற்படலாம் என்பதனை இது உணர்த்துகின்றது.




## தடையை உணர்த்தும் சமிக்ஞை (Prohibition sign)

வட்ட அமைப்பின் நடுவில் காணப்படும் குறியீடானது, மிக விரைவாக ஆபத்து ஏற்படுவதையோ அல்லது ஆரோக்கியத்திற்கு கேடு ஏற்படலாம் என்பதையோ உணர்த்துவதாகவும் குறித்த ஒரு செயலை தடைசெய்வதாகவும் அமைந்துள்ளது.

உதாரணம்: புகைத்தல் தடை




## ஆரோக்கியத்திற்கான தற்காப்பு சமிக்ஞை (Mandatory Action Sign)

தனிப்பட்ட ரீதியில் ஆரோக்கியத்தைக் காக்கவும் தொற்றுக்களைத் தவிர்க்கவும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறையை உணர்த்துகின்றது.

உதாரணம்: பாதுகாப்புக் கையுறையை அணிய அறிவுறுத்தல்.




## தீ விபத்திலிருந்து காக்கச் செய்யும் சமிக்ஞை (Fire Safety Sign)

எப்போதும் தீச்சுவாலைகள் வெள்ளை நிறத்தில் காட்டப்படும். தீயணைக்கும் இடத்தைக் குறிக்கும்.

உதாரணம்: தீயணைக்கும் கருவி.

சிவப்பு பின்னணியிலான சதுரக் கட்டம்.



நடுவில் வெள்ளை நிறத்தில் சமிக்ஞை காட்டப்பட்டிருக்கும். எப்போதும் தீச்சுவாலை வெள்ளை நிறத்தில் காட்டப்படும்.

## தற்காப்பு சமிக்ஞை (Safe Condition Sign)

முதலுதவிகள் செய்யப்படும் இடம் மற்றும் அவசரத்தின் போது தேவையான உபகரணங்கள் அல்லது ஆபத்தின்போது கையாள வேண்டிய வழிமுறைகள் இதனூடாகக் காட்டப்படும்.

பச்சை நிறப் பின்னணியிலான கட்டம்.



நடுவில் வெள்ளை நிறத்தில் குறித்த சமிக்ஞை காட்டப்படும்.



புகைத்தல் தடை



நீந்துதல் தடை




உள்நுழைதல் தடை



கைப்பேசி பாவித்தல் தடை



விலங்குகளுடன் நுழைதல் தடை




வாகனங்கள் நிறுத்துதல் தடை



தொடுவதைத் தவிருங்கள்



புகைப்படக் கருவிக்குத் தடை



இந்த நீரைப் பருகாதீர்



பாதசாரிகள் உள்நுழைதல் தடை



இங்கு உணவு உட்கொள்ளத் தடை



'ஹோர்ன்' அடித்தல் தடை



ஆண்/பெண் கழிவறை



கழிவுப்பொருட்களை இவ்விடத்தில் போடுங்கள்




தகவல்கள்



மருத்துவமனை



மின் தூக்கி



பஸ் தரிப்பிடம்



மீள் சுழற்சி



சிற்றுண்டிச்சாலை



வெளியேறும் வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 4 கணிதம் (பகுதி - I) (சென்ற வாரத் தொடர்ச்சி)

பெயர்: ....................................................

16) 33+42 இற்குச் சமமான விடையைக் கொண்ட அடைப்பு எது?

1. 25+50  2. 20+50  3. 26+39

17) கடிகார முகமொன்றில் நிமிட முள் 8 ஐயும் மணித்தியால முள் 3 இற்கும் 4 இற்கும் இடையில் இருந்தால், கடிகார முகம் காட்டும் நேரம் யாது?

1. 3.40  2. 4.40  3. 2.40

18) நிறையை அளவிடும் அலகின் நியமக் குறியீடு எது?

1. KG  2. Kg  3. kg

19) 5m இல் உள்ள cm களின் எண்ணிக்கை;

1. 50cm  2. 5000cm  3. 500cm

20) உமது பயிற்சிப் புத்தகத்தை அளக்கப் பயன்படும் அலகு எது?

1. cm  2. m  3. km

## கணிதம் (பகுதி - II)

01. பின்வரும் எண்களை எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

1. 2010  2. 3120

02. செங்கல், பந்து, டின்மீன் இவற்றில் காணப்படும் உச்சிகளின் எண்ணிக்கையை முறையே தருக.

03. 342+472 = .............. வரும் எண் யாது?

04. கடிகாரத்தில் 3.40 மணியை குறித்துக் காட்டுக.

05. கமலின் வயது 12. அவனின் வயதைவிட, அவனின் தம்பியின் வயது மூன்றில் ஒரு பங்கு எனின் தம்பியின் வயது யாது?

06. 3kg பருப்பில் 500g நிறையுடைய பக்கற்றுக்கள் எத்தனை தயாரிக்கலாம்?

07. 3,422 என்ற எண்ணிற்கும் 2,316 என்ற எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?

08. 5 ஆயிரங்கள், 3 நூறுகள், 4 பத்துகள், 1 ஒன்றுகள் கொண்ட தொகுதியின் எண் யாது?

09. 5cm நீளம் கொண்ட ஒரு நாடாவில் இருந்து 50cm கொண்ட சிறிய நாடாக்கள் எத்தனை வெட்டலாம்?

10. 450g நிறையுடைய விளாம்பழத்தைப் போன்று 5 விளாம்பழங்களின் நிறையை kg இல் தருக?

11. ரூபா 750 இற்கு வாங்கிய மாம்பழங்களை ரூபா 1,250 இற்கு விற்றால், அவ்வியாபாரி பெறும் இலாபம் யாது?

12) 7432 இல் 4 இன் இடப்பெறுமானம் யாது?

13. ஒரு பாத்திரத்தில் 2l நீர் இருந்தது. அதிலிருந்து 350ml நீரை வெளியேற்றினால், மிகுதியாக எஞ்சியிருக்கும் நீரின் அளவு யாது?


14. பின்வரும் எண்கோலங்களின் அடுத்து வரும் எண்களைக் காண்க.

i) 4, 8, 12, 16, .........., ...............

ii) 6, 10, 14, 18, .........., .............


15. முக்கோண வடிவ பூந்தோட்டமொன்றின் ஒருபக்க நீளம் 21cm எனின், அப்பூந்தோட்டத்தின் சுற்றளவு யாது?




16.  அருகில் உள்ள பென்சிலின் நீளம் யாது?

...............................................

17. வட்டத்தினுள் உள்ள இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய இலக்கம் ஒன்று தருக.






## தரம் - 4 கணிதம் விடைகள் (பகுதி -1)

*(2 ஆம், 9 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*


| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 06) 3 | 11) 1 | 16) 1 |
| 02) 1 | 07) 2 | 12) 2 | 17) 1 |
| 03) 1 | 08) 1 | 13) 2 | 18) 2 |
| 04) 2 | 09) 3 | 14) 3 | 19) 3 |
| 05) 2 | 10) 2 | 15) 1 | 20) 1 |

## விடைகள் (பகுதி -2)

01.  

02. 8, 0, 0

03. 814

04. 

05. 4

06. 6

07. 1106

08. 5341

09. 10

10. 2.25kg

11. ரூபா 500

12. நூறுகள்

13. 1650ml

14. I) 20, 24

II) 22, 26

15. 63cm

16. 3cm

17. 2532, 5322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் தீர்க்கப்படாத பறக்கும் தட்டு மர்மம்!



கனடாவில் நடைபெற்ற பேஸ்போல் போட்டியொன்றினை பார்வையிட்டுக்கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கிலான ரசிகர்களுக்கு, அண்மையில் புதுமையானதொரு அனுபவம் கிடைத்தது. அதாவது, போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது வானில் பறக்கும் தட்டைப் போன்றதொரு மர்மமான வான்கலமொன்றை அவர்கள் கண்டனர்.

இப்போட்டி கெனடாவின் மேற்குக் கரையோரமுள்ள வன்கூவர் நகரில் உள்ள நெட்பேலி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியாக நிகழ்ந்த குறிப்பிட்ட நிகழ்வில் வன்கூவர் கெனடியன்ஸ் எனும் குழுவும் எவரட் எக்வா சொக்ஸ் எனும் அணியுமே மோதின. இவ்விரு அணிகளினதும் ஆதரவாளர்கள் பெருந்தொகையில் மைதானத்தில் கூடி தத்தமது அணிகளை ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தனர். திடீரென அவர்கள் அதனை நிறுத்திவிட்டு வானில் நீலநிற ஒளியுடன் கூடிய மர்மமான அந்த வான்கலத்தையே வைத்த கண் வாங்காமல் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனராம். நன்றாக அவதானித்தபொழுது அது சரியாகப் பறக்கும் தட்டைப் போன்றே காட்சியளித்ததாம். அதன்பின் ரசிகர்களும் விளையாட்டு வீரர்களும் என அனைவரும் இதனையே பார்க்க ஆரம்பித்தனர். சிலர் அதனைப் புகைப்படம் எடுத்ததோடு, வீடியோக்களும் எடுத்தனர். கிடைத்திருக்கும் தகவலின்படி, விளையாட்டுத் திடலில் கூடியிருந்த அனைவரும் இந்த மர்ம வான்கலத்தைக் கண்டுள்ளனர். எனினும், அனைவரும் இந்த வான்கலத்தைப் பார்த்தபடியே இருந்தபொழுது யாருக்கும் தெரியாமல் வன்கூவர் கெனடியன்ஸ் அணி 5-1 என்ற வித்தியாசத்தில் போட்டியில் வெற்றியும் பெற்றது. நடப்பு செம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டது.



எனினும், இந்த மர்மம் நிறைந்த வான்கலம் பற்றிய தெளிவானதும் உறுதியுமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. சிலர் தாம் பெற்ற அனுபவத்தை தத்தமது Twitter செய்திப்பரிமாற்றங்களில் பதிவு செய்துள்ளனர். பல வீடியோக்களை Youtube இல் கூட பதிவிட்டுள்ளனர். சிலர் இப்புகைப்படம் புகைப்பட நிலையங்களில் உருவாக்கப்பட்டவை என கூறுகின்றனர். பெரும்பாலானோர் இதனை விமானப்படையினரின் வான்கலம் என்றும் கூறுகின்றனர். ஏனெனில், வன்கூவர் சர்வதேச விமான நிலையம் இந்த மர்ம வான்கலம் மேலே எழும்பிய இடத்திலேயே அமைந்துள்ளது. அதனால், அவர்களில் கருத்திலும் உண்மை இருக்கின்றது. மேலும், சிலர் இது காலநிலை குறித்து தகவல்களை சேகரிப்பதற்காக அனுப்பப்பட்டதொரு பலூன் என்கின்றனர்.

எது எப்படி இருந்தபொழுதிலும் இவ்வாறு இனங்காணப்படாத பறக்கும் கருவி அதாவது UFO கெனடா மக்களின் பார்வையில் பட்டது இது முதல் தடவையல்ல. வருடத்திற்கொருமுறை இத்தகைய அபூர்வ காட்சியை அவர்கள் கண்டுகளித்துள்ளதாக கடந்தகால தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இரஞ்சித் ஜெயகர்**




## 'எனது நாடு'

ஜப்பான் குமமோத்தோ UNESCO அமைப்பின்

## சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி 2013

Child art Studio | UNESCO KUMAMOTO | UNESCO United Nations Educational, Scientific and Cultural Organization

ஏற்பாட்டாளர்: குமமோத்தோ UNESCO நிறுவனம் - ஜப்பான்

பங்குபற்றல்: சிறுவர் கலை அரங்கு Child art Studio- இலங்கை

சித்திரத்தின் தொனிப்பொருள்: எனது நாடு- My Country

சிறுவர்கள் வரையும் சித்திரத்தில் பிரதிபலிக்கப்படும் கலாசாரப் பெறுமதி கொண்ட அனுபவங்களை சர்வதேசப் பிரஜைகளுடன் பரிமாறிக் கொள்வது இந்த போட்டியின் நோக்கமாகும்.

சுற்றாடல் (மனிதர் உட்பட) தொடர்பான உணர்வுபூர்வமான புரிந்துணர்வு கொண்ட தீவிரமான அக்கறையை ஏற்படுத்துவதும், எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கப்படும் இந்த ஈடு இணையற்ற நட்புணர்வின் முக்கியத்துவம் குறித்து உத்வேகத்தை ஏற்படுத்துவதும் இப்போட்டியின் தொனிப் பொருளாக அமைகின்றது.

**நீங்கள் வரையும் சித்திரம்:** அழகிய சுற்றாடலில் நானும் எனது நாடும்/எனது நாட்டைப் பற்றி நான் சிந்திக்கும் விதம்/ மேலும் எனது நாட்டைப் பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும் விதத்திலும் நீங்கள் விரும்பிய தலைப்பில் சித்திரம் வரையலாம்.

**நாம் எதிர்பார்ப்பது:**

* நவீன முறையில் படைப்புத் திறன் மிக்க தீவிர வெளிப்பாட்டுத் தன்மை கலைத்துவ அடிப்படையில் இருத்தல்.
* வழமையான முறையில் இல்லாமல் புதிய சிந்தனைத் திறனுடன் உங்கள் படைப்பினை பூர்த்தி செய்ய முடியும்.

**ஊடகம்:** சித்திரத்தில் எந்தவொரு வரைதல் ஊடகத்தையும் பயன்படுத்தலாம். கொலாஜ் அல்லது எந்தவொரு கிரஃபிக் ஊடகத்தினாலும் சித்திரம் வரையலாம்.

**உங்களது படைப்பின் நீளம், அகலம்:** 38cm X 54cm

**வயதெல்லை:** 4 முதல் 15 வயதுவரை (2013 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள்)

**பரிசும் விருதும்:** ஜப்பானின் குமமோத்தோ நிறுவனத்தின் தலைவர் விருது, சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும்.

**சிறப்பு:** இரண்டாவது இடத்தைப் பெறும் இருவருக்கு பரிசுகள் வழங்கப்படுவதோடு, அதிசிறப்பு விருதுகள் ஒன்பது மற்றும் முப்பத்தியெட்டு பாராட்டு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். நீங்கள் பெறும் வெற்றிக்கு ஏற்ப அந்த சிறப்பு சித்திரங்கள் ஜப்பானின் குமமோத்தோ UNESCO 2014 கெலண்டரில் சேர்க்கப்படும். அதன் பிரதிகள் உங்களுக்கு வழங்கப்படும்.

### 'எனது நாடு' சிறுவர் சித்திரப்போட்டி - 2013

போட்டியாளர் பெயர்: ............................................

Name in Full: ............................................

(English Capital)

வயது: ............................................

வீட்டு முகவரி: ............................................

............................................

தொலைபேசி இலக்கம்: ............................................

(போட்டி முடிவை அறிவிக்க)

பாடசாலையின் பெயர்: ............................................

பாடசாலை முகவரி: ............................................

மாவட்டம்: ............................................

இந்த படைப்பு மேற்கூறப்பட்ட போட்டியாளரினுடையது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

............................................

சித்திரப்பாட ஆசிரியர்/ஆசிரியை

.................................... ....................................

அதிபர் திகதி

**இறுதி திகதி:** சித்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி 2013 ஒக்டோபர் 25. (ஒக்டோபர் 21 முதல் 25 வரை நேரடியாகவும் சித்திரங்களை ஒப்படைக்க முடியும்) சித்திரத்தில் மடிப்பு ஏற்படாதவகையிலும் பழுதுபடாத வகையிலும் உறையில் இட்டு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்க முடியும்.

**சித்திரங்கள் அனுப்பவேண்டிய முகவரி:** (இதில் விரும்பிய முகவரிக்கு அனுப்பலாம்)

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
Child art Studio,
53/7, கிறெகரி வீதி,
கொழும்பு-07

* * *

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
27/2, குருதெனிய வீதி,
அம்பிட்டிய.

**மேலதிக விபரங்களுக்கு:** 0714820151 (தினமும் மாலை 7 முதல் 10 வரை)

* இந்த சித்திரப் போட்டியில் அதிசிறப்பு விருதைப் பெறும் மாணவ/மாணவியரது பாடசாலைக்கும் விசேட மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

ஊடக அனுசரணை: விஜய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு மரணம் என்றால் என்ன?

14 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பாதிப்பை ஏற்படுத்திய கொடிய தொற்று நோயாகவே இச்சம்பவம் கருதப்படுகின்றது. ஆசியாவில் முதன்முதல் தொற்றிய இந்தத் தொற்றுநோய் 1347 இல் துருக்கிப் படைகளின்மூலம் கிரிமியாவில் பரவியது. அதன் பின்னர் மத்திய தரைக்கடலைச் சேர்ந்த அனைத்துத் துறைமுகங்களிலும் பரவிய தொற்றுநோய் முழு ஐரோப்பாவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 1347 முதல் 1351 வரை சுமார் 4 ஆண்டுகள் மரணத்தின் கொடூரம் சூழ்ந்த இருண்ட காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. 1400 வரை




ஆங்காங்கே தொற்றுநோய் தலையெடுத்து நகரங்களையும், கிராமங்களையும் அழித்தது. தொலைதூரப் பிரதேசங்களைவிட, நகரங்களிலேயே இத்தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.



சில சந்தர்ப்பங்களின்போது நகரங்களில் வசித்தவர்கள் அனைவரும் கூட்டாக இந்தத் தொற்றுநோய்க்குப் பலியாகினர். இதனால், ஐரோப்பாவின் பொருளாதாரமும் பெரும் வீழ்ச்சியை அடைந்தது. ஐரோப்பாவின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு வீதத்தினர் அதாவது மொத்த சனத்தொகையில் 25 சதவீதமானவர்கள் கறுப்பு மரணத்தைத் தழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5380
ஆர்.எம்.அஸாம், தாழையடி வீதி, கண்டல்குழி,


அங். இல: 5381
அப்துல்லாஹ் அருஸ், றக்ஸபான, மல்வானை.


அங். இல: 5382
எம்.ஏ.கதீஜா, கபுறுபிடிய வீதி, கிரிந்த.


அங். இல: 5383
மு.தரனிகன், திருவையாறு, கிளிநொச்சி.


அங். இல: 5384
எஃப்.சிபானா, நகர மண்டப வீதி, கல்முனைக்குடி-13.


அங். இல: 5385
ஜே.கவிமதுஷன், ஆரியபுர, பொகவந்தலாவ.


அங். இல:5386
சி.பாவாணன், குருநகர், யாழ்ப்பாணம்.


அங். இல: 5387
அப்ரார், தர்கா நகர், களுத்துறை.


அங். இல: 5388
என்.கலீலுர்ரஹ்மான், கொலன்னாவ வீதி, கொலன்னாவ.


அங். இல: 5389
சி.கபிலன், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.


அங். இல: 5390
இ.புகழன், பூவரசங்குளம், வவுனியா.


அங். இல: 5391
எஸ்.இந்துஷா, செகுவந்தீவு, புத்தளம்.

## துஷாரா கலைவட்டம் - 2013

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்கள் வருமாறு:

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் இதில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்தவொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**இவற்றை வெல்லுங்கள்**
வெற்றிக் கிண்ணங்கள் - 68
தங்கப் பதக்கங்கள் - 188
வெள்ளிப் பதக்கங்கள் - 15
வெண்கலப் பதக்கங்கள் - 15
பரிசு/சான்றிதழ்கள் - 5000

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின், அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட மாணவர்களின் 100 சித்திரங்களை ஒன்றாக சேர்த்து அனுப்புகின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன், குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி: 2013 ஒக்டோபர் 30.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேனை, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704. மேலதிக விபரங்களுக்கு 'விஜய்' பத்திரிகையைப் பார்க்கவும்.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

அகில இலங்கை சித்திரப்போட்டி-2013

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex :
ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ............................ | ............................ | ............................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் | திகதி | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் |
| Applicant's Signature | Date | Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



iOS 7.0.2
Apple Inc.
Preparing Update...
- Fixes bugs that could allow someone to bypass the Lock screen passcode
- Reintroduces a Greek keyboard option for passcode entry

For information on the security content of this update, please visit this website:
http://support.apple.com/kb/HT1222

Apple நிறுவனத்தின் iPhone, iPad போன்ற சாதனங்களின் இயங்குதளங்களான iOS 7, iOS 7.0.1 ஆகியவற்றை மேம்படுத்தி (update), புதிய 'iOS 7.0.2' என்ற புதிய இயங்குதளமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## Apple நிறுவனத்தின் புதிய மேம்படுத்தப்பட்ட இயங்குதளம்:

# 'iOS 7.0.2'



iOS 7 வெளியீட்டுக்குப் பின்னர் Log Screen சிக்கல்கள் மேம்படுத்தப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. iPhone 5 இல் 21MB பதிவிறக்கம் செய்யக்கூடியதாக iOS 7.0.2 மேம்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, Log Screen சிக்கல்கள் ஏற்படும்போதும் iPhone பயனாளர் ஒருவர் மற்றொருவருக்கு அழைக்கக்கூடியதாக இது மேம்படுத்தப்பட்டுள்ளது. iPhone சாதனத்தில் Log Screen சிக்கல்கள் இருக்கும்போது, அத்தியாவசிய அழைப்பினை (emergency call) மட்டும் ஏற்கக்கூடியதாக இல்லாமல், ஏனைய இலக்கங்களையும் அழைக்கக்கூடியதாக இது மேம்படுத்தப்பட்டுள்ளமை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

NULL dereferences போன்ற சிக்கல்களைச் சரிசெய்வதற்காக, இந்த புதிய iOS 7.0.2 இயங்குதளம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக Apple நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இங்கே மடிக்கவும்



# Google இன் 15 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம்



Google நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்ததையிட்டு, அந்த நாளை சிறப்பானதொரு doodle உடன் Google கொண்டாடியது. இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக,பயனர்களை (users) தனது பழைய (1998 ஆம் ஆண்டின்) Google Homepage இற்குக் கொண்டுசென்றிருந்தது. அத்தோடு, அன்றைய தினம் நீங்கள் Google Logo வுடன் பிறந்தநாளைக் கொண்டாடி விளையாடக்கூடிய வகையில் 'Interactive doodle' ஐக் கொண்டதாக Google இன் Logo காணப்பட்டது.

அன்றைய தினத்தின் doodle இல் காணப்பட்ட Google என்பதற்கான எழுத்துக்கள் நகரும் தன்மை கொண்டதாக இருந்ததோடு, இரண்டாவது 'o' எழுத்தானது கேக் வடிவத்திலும் இருந்தது. கேக்கின் மேல் 15 என்ற வடிவத்தில் மெழுகுவர்த்தி காணப்பட்டது. நான்காவதாக இருந்த 'g' எழுத்தானது கண்ணைக் கட்டியபடி கம்புடன் ஒருவர் நிற்கும் தோற்றத்தில் இருந்தது.





spacebar ஐத் தட்டியதும் 'g' எழுத்தின் கையில் உள்ள கம்பு நட்சத்திர வடிவிலிருந்த பையை அடிக்கும். உடனே அந்தப் பையில் இருந்து சொக்லெட்கள் கொட்டும்.


இந்த விளையாட்டுடன் Google இன் புதிய தேடல் நுட்பமாக 'HummingBird' search algorithm உம் இந்த பிறந்தநாளுடன் அறிமுகப்படுத்தப்பட்டதாக Google நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவரான அமித் சிங்கால் தெரிவித்திருந்தார்.

இங்கே வெட்டவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிநவீன மேம்படுத்தல்களுடன் Crossbar நினைவகம்









தற்போது சந்தையில் இருக்கும் iPhone, iPad மற்றும் பிற Tablet களில் நாம் பொதுவாகச் சொல்லும் Internal Memory என்பது RRAM, NAND based RRAM எனும் Flash Memory கள் ஆகும்.

இந்த வகை நினைவகங்களில் சில GB க்கள் அளவுதான் சேமிக்க முடியும். இந்த வரிசையில் ஒரு தொழில்நுட்பப் பாய்ச்சலாக தற்போது Internal Memory யில் ஒரு TB வரை சேமிக்க இயலும் வகையிலான Crossbar எனும் புதிய வகை நினைவகம் (Memory) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**Crossbar நினைவகத்தின் சிறப்பம்சங்கள்**

✱ இதன் பரும அளவு ஏனைய நினைவகங்களைவிட சிறியது.

✱ இது பயன்படுத்தும் மின் அளவு முன்னைய நினைவகங்கள் பயன்படுத்துவதைவிட 20 மடங்கு குறைவு.

✱ இதன் நினைவகக் கொள்ளளவு 200 மடங்கு அதிகமாக இருக்கும்.

✱ ஒரு செக்கனுக்கு 140GB data வை இந்த Crossbar சிப்பில் எழுத முடியும். (Flash Memory யில் ஒரு செக்கனுக்கு 7GB தான் எழுதமுடியும்)

✱ இதனை உருவாக்கியவர் Wei Lu என்ற அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆவார்.

✱ Google Glass போன்ற புதிய வகை சாதனங்களிலும் இந்த நினைவகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் பல வகை வசதிகளைப் பயனர்களுக்குக் கொடுக்க முடியும்.

✱ Crossbar நிறுவனமானது, இது வரை 100 கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகளுக்கு விண்ணப்பம் செய்துள்ளது. அவற்றில் 30 காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கணினித் தகவல் திருட்டைத் தடுக்க புதிய மென்பொருள்





இணையத் தாக்குதல்களிலிருந்து எமது கணினிகளைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு வேலி போட்டுவைக்க வேண்டியது அவசியமாகும். அதேபோல முக்கிய தகவல்களைத் தாங்கி நிற்கும் இணையத்தளங்களுக்கும் பாதுகாப்பு வேலி அவசியம். வங்கிகளில் செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மிஞ்சும் வகையில், இணைய உலகிலும் வைரஸ் தடுப்பு மென்பொருட்கள், Malware களோடு மல்லுக்கட்டும் மென்பொருட்கள், firewall எனப்படும் பாதுகாப்பு வேலி போன்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால், இந்த மென்பொருள்களினதும் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, இணையத்தளங்களுக்குள் நுழைந்துவிடும் கில்லாடிகளும் இருக்கவே செய்கின்றனர்.




டேவிட் கோரெட்ஸ்

அந்தவகையில், அண்மையில் அறிமுகமாகியுள்ள 'mykonos' என்னும் புதிய மென்பொருளானது, தகவல் திருடர்களை உள்ளே அழைத்து, அதன்பிறகு அவர்களுக்குப் போக்குக் காட்டி, வெறுப்பேற்றிக் களைப்படைவைத்து-விட்டால்போதும் என தலைதெறிக்க ஓட வைக்குமளவிற்கு சுவாரஸ்யமானதாக உள்ளது. இந்த மென்பொருளானது, திருடர்களுக்கு தவறான தகவல்களை வழங்கி, வழக்கமாக ஒரு மணி நேரத்தில் முடியவேண்டிய வேலையை பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கிறது.

கணினித் தகவல் திருடர்களைத் தடுக்க எவ்வளவுதான் பாதுகாப்பான வழியை உருவாக்கினாலும் அதனை உடைக்கக்கூடிய வழியைக் கண்டுபிடித்துவிடும் நிலை இருப்பதால், mykonos மென்பொருளானது, மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என mykonos நிறுவனத்தின் தலைவர் டேவிட் கோரெட்ஸ் தெரிவிக்கின்றார். இந்த மென்பொருளானது, கணினித் தகவல் திருடர்களின் முயற்சியை வீணடித்து, அந்தச் செயலுக்கான பயனையே கேள்விக்குள்ளாக்கிவிடுவதாகவும் அவர் கூறுகிறார். இந்த மென்பொருள் பற்றிய மேலதிக விபரங்களை http://www.mykonossoftware.com எனும் இணையத்தள முகவரியில் சென்று பார்க்கலாம்.




12

இங்கே வெட்டவும்




# Microsoft அறிமுகப்படுத்தும் கைக்கணினிகள்

கணினி உலகின் ஜாம்பவானான மைக்ரோ சொஃப்ட், தற்போது இரண்டு கைக்கணினிகளை (Tablets) வெளியிட்டுள்ளது. இவை Microsoft 'Surface 2' மற்றும் 'Surface Pro 2' என்று பெயரிடப்பட்டுள்ளன. இவற்றின் சிறப்பம்சம் யாதெனில், நமக்குத் தேவைப்படும்போது, இவற்றை மடிக்கணினியாகவும் (Laptop) பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதாகும். அதற்காகவே, பிரத்தியேகமான Keyboard ஐயும் இவை கொண்டுள்ளன. மடிக்கணினிபோல் பயன்படுத்த விரும்பினால், அந்த Keyboard ஐ இணைத்தால் மட்டும் போதும். மேலும் இவை நான்கு வகையான நிறங்களில் சந்தைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.






# Flexible Display உடன் வருகிறது... Samsung Galaxy Note 3

Flexible Display யினைக் கொண்ட 'Samsung Galaxy Note 3' ஆனது, வரையறுக்கப்பட்ட பதிப்புடன் (limited edition), வடிவமைக்கப்பட்டுள்ளதாக Samsung நிறுவனம் அறிவித்துள்ளது.

5.7 அங்குல KO HD Super AMOLED Display யுடன் இது வெளிவருகிறது. இது 168 கிராம் எடையுள்ளதாக இருக்கும். 1.9GHz Octa-core செயலியைக் கொண்டிருக்கும். புரோஸசர் 3GB Qualcomm Snapdragon 800 ஐக் கொண்டிருக்கும். 13 மெகாபிக்சல் பின்புற கெமராவையும் 2 மெகாபிக்சல் முன் கெமராவையும் இது தாங்கிவருகிறது.

Android 4.3 jelly bean இயங்குதளத்தை உடைய இது, xU microSD அட்டை வழியாக 64GB வரை விரிவாக்கக்கூடிய நினைவகத்தையும் கொண்டிருக்கும். 16GB, 32GB மற்றும் 64GB சேமிப்பு நினைவக வகைகளில் இது சந்தையில் கிடைக்கும் என்று Samsung நிறுவனம் தெரிவித்துள்ளது.

# Acer இன் தொடுதிரை மடிக்கணினி




Acer நிறுவனம் தொடுதிரை தொழில்நுட்பத்துடன் கூடியதும் C720 Haswell Chromebook எனும் தொடரிலக்கத்தைக் கொண்டதுமான மடிக்கணினிகளை அறிமுகப்படுத்த இருக்கின்றது.

இவை Intel Celeron 2955U Haswell Processor, பிரதான நினைவகமாக 2GB அல்லது 4GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. இவற்றின் சேமிப்பு நினைவகமாக 16GB, 32GB கொள்ளளவு காணப்படுகின்றது.




3950mAh மின்கலத்தினைக் கொண்டுள்ள இந்த மடிக்கணினியின் ஏனைய தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிச் 'சிப்' களுக்குள் கலக்கல் ஓவியங்கள்




*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

குகை ஓவியங்கள் போன்று கண்டறியப்படாமல் இருந்த இந்த சிப் ஓவியங்களை, உலகின் பார்வைக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர் மைக்கேல் டேவிட்சன் என்பவராவார்.

மைக்கேல் டேவிட்சன் சுவாரஸ்யமான மனிதர். அமெரிக்காவின் ஃப்ளோரிடாவைச் சேர்ந்த ஆய்வாளரான அவரது ஆர்வமும் ஆய்வும் நுட்பமானவை. நுண்நோக்கியின் உதவியுடன் கண்ணுக்குத் தெரியாத உலகில் நுழைந்து பார்க்கும் 'செல் பயோலஜி'தான் அவரது ஆய்வுத்துறை.


டேவிட்சன் கணினிச் சிப்களையும் நுண்நோக்கிமூலம் படம் பிடித்திருக்கிறார். இந்தப் படங்களைக் கொண்டு நாட்காட்டியை வெளியிடுவதும் அவரது வழக்கம். 'சிப் ஷொட் கெலண்டர்' என்று இவற்றுக்குப் பெயர்.


1990 களில் மைக்ரோ சிப்களைப் படம் பிடித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. அவர் படம் பிடிக்க முயன்ற அந்தக் குறிப்பிட்ட சிப்பின் Circuit மூலையில் சித்திரம் போன்ற ஓர் உருவம் இருப்பது அவரது கண்ணில் பட்டது.

கொஞ்சம் கவனித்துப் பார்த்தபோது, அந்த உருவம் சிறுவர் உலகில் பிரபலமான கார்ட்டூன் பாத்திரமான வோல்டோவைப் போலவே இருந்தது. Circuit இல் ஓவியம் எப்படி வந்தது என யோசித்தபடி, மேலும் ஆய்வு செய்து பார்த்தபோது, மேலும் சில கார்ட்டூன் சித்திரங்களும் அதில் வரையப்பட்டிருப்பதைப் பார்த்து டேவிட்சன் வியந்து போனார்.

சிப் வடிவமைப்பு நுணுக்கத்தை யாரும் கண்டுபிடித்துப் பிரதி செய்துவிடக்கூடாது என்பதற்காக கையாளப்பட்ட யுக்தியாக இது இருக்கலாம் என நினைத்த அவர், இந்த ஓவியத்தின் புகைப்படத்தை இணையத்தளத்தில் இடம்பெற வைத்தார். இந்தப் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு 'கெவின் குன்' என்பவர் டேவிட்சனைத் தொடர்புகொண்டார்.

கெவின், 'எம்.ஐ.பி.எஸ். டெக்னொலஜிஸ்' நிறுவனத்தில் முதன்மை சிப் வடிவமைப்பாளராகப் பணியாற்றியவர் ஆவார். சிப் Circuit இல் காணப்பட்ட ஓவியம் குறித்து கெவின் டேவிட்சனுக்கு விளக்கமளித்தார். அந்த ஓவியத்தை வடிவமைப்பாளரின் கையெழுத்து என்று கூறிய கெவின், டேவிட்சன் முதலில் கண்டுபிடித்த ஓவியம் வோல்டோ போலத் தோற்றமளித்தாலும் அது வோல்டோவன்று எனவும் மாறாக, அது தன்னுடன் பணியாற்றிய சக வடிவமைப்பாளர் என்றும் கூறினார். சிப் வடிவமைப்புக்காகவே, தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட சக வடிவமைப்பாளரின் உருவத்தை தான் வரைந்து வைத்ததாகவும் கெவின் கூறினார்.






மைக்கேல் டேவிட்சன் தனது ஆய்வகத்தில்...

## கண்டறியப்பட்ட ரகசியக் கலை!

இதன்மூலம் சிப் இற்குள் ஓவியம் வரையும் பழக்கம் பற்றித் தெரிந்துகொண்ட டேவிட்சன், மிகுந்த ஆர்வத்தோடு மற்றைய சிப்களையும் தேடிப்பார்த்து, அவற்றில் வரையப்பட்ட ஓவியங்களைப் படம் பிடித்துச் சேகரிக்கத் தொடங்கினார்.

இந்த ஓவியங்களை எல்லாம் தனது இணையத்தளத்தில் 'silicon zoo' என்னும் பிரிவில் இடம்பெற வைத்தார். இந்த சிலிக்கன் சித்திரங்களை இந்தத் தளத்தில் பார்த்து ரசிக்க முடிவதோடு, தேவைப்பட்டால் அவற்றை கட்டணம் செலுத்தி Screen Saver ஆக டவுன்லோட் செய்தும் கொள்ளலாம்.

சிப் ஓவியத்தை மட்டுமன்றி, அவரது மற்றைய மைக்ரோ படைப்புகளையும் பார்த்து ரசிக்கலாம்; டவுன்லோட் செய்யலாம். அப்படியே நுண்நோக்கியால் காணக்கூடிய உலகம் பற்றியும் அதன் பரிமாணங்கள் பற்றிய நுணுக்கமான அறிவியல் தகவல்களையும் தெரிந்துகொள்ளலாம்.இதற்கான இணையத்தள இணைப்பு http://micro.magnet.fsu.edu/creatures/index.html என்பதாகும். *(முற்றும்)*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெகுசன தொடர்புப் பணிகள் அல்லது செயன்முறைகள்

வெகுசன தொடர்பு நிலைகள் பொதுமக்களின் வாழ்வியல் செயன்முறைகளில் ஒரு பகுதியாக மாற்றம் பெற்றுள்ளது. ஒரு நாட்டின், அந்நாட்டு மக்களின் வாழ்வியல் போக்கு, சிந்தனை, செயற்பாடுகள், வெளியீடுகள் யாவற்றையும் அங்குள்ள ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் செய்திகள் மூலமே அறியக்கூடியதாக உள்ளது. ஒரு மனிதன் தான் எந்தத் திசையில் பயணிக்கின்றான் என்பதை விளங்கிக்கொள்வதற்கும் செய்திகள் அவசியமாகின்றன.







ஊடக பாடநெறி 54

பத்திரிகையானது, நடப்பு நிகழ்ச்சிகளையும், கருத்துக்களின் போக்குகளையும் மக்களுக்குத் தெரிவிக்கவும், பிரிந்து செல்லும் பரப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் கட்டிக்காக்கவும் பல்வேறு வகையான கருத்துக்களை வெளிக்காட்டும் வகையில் நடைமுறைச் சிக்கல்கள் பற்றிய விவாதத்தைத் தூண்டவும் முயல வேண்டும் என பத்திரிகையின் அறிவித்தல் பணி தொடர்பிலான சிந்தனை உணர்த்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தொடர்பு ஊடகங்கள் மக்களுக்கு அறிவுறுத்தல் பணிகளுடன் பயிற்றுவிக்கும் அதாவது, போதிக்கும் பணிகளையும் முன்னெடுக்கின்றன. மானிட அறிவு விருத்திக்கு ஊடகங்கள் வழிமூலமாகவும், துணைக் கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்ற புறச்சூழ் நிலைகள் உருவாகியுள்ளன. கல்வியையும் பொழுது போக்கையும் ஒன்றிணைக்கும் வகையில் Educational Entertainment என்ற இரு சொற்களையும் ஒன்றிணைத்து Edu+Entertainment = Edutainment என்ற புதிய எண்ணக்கருவின் அடிப்படையில் வெகுசன ஊடக செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.


வெகுசன ஊடகங்கள் சமுதாயத்தின் காவல்நாய்களாகப் பணியாற்றுகின்றன. அவை சமூகத்தின் முக்கிய நிகழ்வுகளை எந்நேரமும் உன்னிப்பாக அவதானிக்கின்றன. மக்களைக் காக்கும் செயன்முறையின் அடிப்படையாகத் திகழ்கின்றன. தொடர்பு ஊடகங்கள் சமூகம் நாடு, பூளோக அடிப்படையில் தொடர்புபடுத்தல் (Correlation) பணியை முன்னெடுக்கின்றன.

(தொடரும்)





பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


## தளிர்கரம்





இடைவெளிகளை நிரப்புக.




புள்ளிகளை இணைத்து உருவைக் கண்டறிந்து கொடுக்கப்பட்டுள்ளவாறு நிறங்களைத் தீட்டுக.



மிகச்சிறிய உருவைச் சுற்றி வட்டமிடுக.




வடிவங்களுக்கு ஏற்ப நிறந்தீட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**පුතා:** **අම්මේ! හෙට අපේ පාසලේ පොත් ප්‍රදර්ශනයක් තියෙනවා.**
அம்மே! ஹெட்ட அபே பாசலே பொத் ப்ரதர்ஷனயக் தியெனவா.
**மகன்:** **அம்மா! நாளை எங்கள் பாடசாலையில் புத்தகக் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.**

**අම්මා:** **පොත් ප්‍රදර්ශනේ හෙට විතර ද තියෙන්නේ?**
பொத் ப்தர்ஷனே ஹெட்ட விதர த தியென்னே?
**அம்மா:** **புத்தகக் கண்காட்சி நாளை மட்டுமா நடைபெறுகிறது?**

**පුතා:** **නැහැ අම්මේ, දවස් දෙකක් තියෙනවා.**
நெஹெ அம்மே, தவஸ் தெகக் தியெனவா.
**மகன்:** **இல்லை அம்மா, இரண்டு நாட்களுக்கு இருக்கின்றது.**

**අම්මා:** **මොන පොත් සමාගමෙන්ද ප්‍රදර්ශනේ තියන්නේ?**
மொன பொத் சமாகமென்த ப்ரதர்ஷனே தியென்னே?
**அம்மா:** **எந்தப் புத்தகசாலையினால் கண்காட்சி நடாத்தப்படுகிறது?**

**පුතා:** **හපනා පොත් මැදුරෙන්. ටීචර් කිව්වා ලාබෙට පොත් ගන්න පුළුවන් කියලා.**
ஹபனா பொத் மெதுரென். டீச்சர் கிவ்வா லாபெட்ட பொத் கன்ன புலுவன் கியலா.
**மகன்:** **ஹபனா புத்தகசாலையினால். இலாபமாக புத்தகங்கள் வாங்கலாம் என்று டீச்சர் சொன்னார்.**

**අම්මා:** **ඔයා මොන මොන පොත් ද ගන්නේ?**
ஒயா மொன மொன பொத் த கன்னே?
**அம்மா:** **நீங்கள் என்னென்ன புத்தகங்கள் வாங்கப் போகிறீர்கள்?**

**පුතා:** **මට සිංහල රචනා පොතකුයි දෙමළ-සිංහල පොතකුයි ගන්න ඕනේ.**
மட்ட சிங்ஹல ரச்சனா பொதகுய் தெமள-சிங்ஹல பொதகுய் கன்ன ஓனே.
**மகன்:** **எனக்கு சிங்களக் கட்டுரைப் புத்தகமொன்றும் தமிழ்-சிங்களப் புத்தகமொன்றும் வாங்க வேண்டும்.**

**අම්මා:** **ඒ පොත්වලට කීයක් විතර ඕනේ ද?**
ஏ பொத்வலட்ட கீயக் வித்தர ஓனே த?
**அம்மா:** **அந்தப் புத்தகங்களுக்கு எவ்வளவு வேண்டும்?**

**පුතා:** **රුපියල් 500ක් විතර දෙන්නකෝ. මම ඉතිරි සල්ලි ගෙනත් දෙන්නම්.**
ருபியல் 500க் வித்தர தென்னகோ. மம இதிரி சல்லி கெனத் தென்னம்.
**மகன்:** **500 ரூபா அளவில் தாருங்கள். நான் எஞ்சிய பணத்தைக் கொண்டுவந்து தருகிறேன்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.
..........................................................................................

ii. இரண்டு நாட்களுக்கு இருக்கிறது.
..........................................................................................

iii. புத்தகங்களுக்கு எவ்வளவு வேண்டும்?
..........................................................................................






**இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, Did எனும் இறந்தகால துணை வினைச்சொல்லின் (Past Tense Auxiliary Verb) உதவியுடன், 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறையை மேலும் இங்கே பயில்வோம்.**

(அ) உனது சகோதரன் முகாமையாளருடன் கதைத்தான்.
Your brother spoke to the manager.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) உனது சகோதரன் முகாமையாளருடன் கதைக்கவில்லை.
Your brother did not speak to the manager.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Your brother spoke. (Affirmative)
உனது சகோதரன் கதைத்தான். (உடன்பாடு)

* Your brother didn't speak. (Negative)
உனது சகோதரன் கதைக்கவில்லை. (எதிர்மறை)

(இ) உனது சகோதரி ஆங்கிலம் படித்தாள்.
Your sister studied English.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) உனது சகோதரி ஆங்கிலம் படிக்கவில்லை.
Your sister did not study English.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Your sister studied. (Affirmative)
உனது சகோதரி படித்தாள். (உடன்பாடு)

* Your sister didn't study. (Negative)
உனது சகோதரி படிக்கவில்லை. (எதிர்மறை)

(உ) உனது தந்தை ஒரு கடிதம் எழுதினார்.
Your father wrote a letter.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) உனது தந்தை ஒரு கடிதம் எழுதவில்லை.
Your father did not write a letter.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Your father wrote. (Affirmative)
உனது தந்தை எழுதினார். (உடன்பாடு)

* Your father didn't write. (Negative)
உனது தந்தை எழுதவில்லை. (எதிர்மறை)

(எ) உனது தாய் உனக்கு ஆங்கிலம் கற்பித்தார்.
Your mother taught you English.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) உனது தாய் உனக்கு ஆங்கிலம் கற்பிக்கவில்லை.
Your mother did not teach you English.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Your mother taught. (Affirmative)
உனது தாய் கற்பித்தார். (உடன்பாடு)

* Your mother didn't teach. (Negative)
உனது தாய் கற்பிக்கவில்லை. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலங்களை அருளும் நவராத்திரி







சிவனுக்கு உகந்தது சிவராத்திரி. அவர் தம் தேவிக்கு உகந்தது நவராத்திரி. நவம் என்ற சொல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'நவ நவமாய் பெருகும்' என்று சான்றோர்கள் கூறுவர். நவக்கிரகங்கள், நவரத்தினங்கள், நவதானியங்கள், நவயோகங்கள், நவரசங்கள், நவபாஷாணங்கள், நவகற்பங்கள், நவமேகங்கள், நவநிதிகள் என ஒன்பதின் முக்கியத்துவம் விசேடமாகக் கருதப்படுகின்றது. அந்தவகையில், புரட்டாதி மாத அமாவாசைக்குப் பின்னரான பூர்வபட்ச பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி திதியில் முடியும் ஒன்பது இரவுகளே நவராத்திரி ஆகும். இம்மாதம் 5ஆம் திகதி தொடங்கி 13 ஆம் திகதி நிறைவடையும். இந்த விழா இந்துக்களால் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் உள்ளது.

நவராத்திரியின் ஒன்பது நாட்களும் முப்பெரும் தேவியரின் வழிபாடாகும். முதல் மூன்று நாட்கள் துர்க்கை தேவியையும் அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மி தேவியையும் இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியையும் போற்றி வழிபாடு செய்யப்படுகிறது. அத்துடன், நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாக கொலு வைத்தல் திகழ்கிறது. இது கலை மற்றும் பக்தி உணர்வை வெளிப்படுத்துவதுடன், இதன் தத்துவமாக தாமச குணம், ரஜோ குணம், சத்துவ குணம் ஆகிய குணங்களில் முதல் இரண்டு குணங்களைக் கடந்து சத்துவ குணத்தை அடையும் வழியை கொலு படிக்கட்டுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

நவராத்திரியின் ஒன்பது நாட்கள் முடிந்து பத்தாவது நாளான தசமி திதியை விஜயதசமி என்று கொண்டாடி இனிதே விழாவை நிறைவு செய்வர். பொதுவாக, நற்காரியங்களை பிரதமை, அஷ்டமி, நவமி ஆகிய திதிகளில் செய்வதில்லை. அந்த திதிகளை சிறப்பிப்பதற்காகவும் அனைத்துத் திதிகளிலும் இறைவனின் அம்சம் உள்ளது என்பதை உணர வைக்கவுமே நவராத்தியில் இந்த திதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

நவராத்திரியில் வரும் நவமி தினம் ஆயுத பூஜை எனவும் சரஸ்வதி பூஜை எனவும் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி ஒன்பது தினங்கள் மற்றும் பத்தாவது நாளான விஜயதசமியும் பாடசாலைகளில் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. மாணவர்கள் தங்களது புத்தகங்கள், பேனா, பென்சில் போன்ற கல்வி உபகரணங்களை வைத்து வணங்குவர். அத்துடன், கடைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் என அனைத்து துறையினரும் ஆயுத பூஜையைக் கொண்டாடுவர்.

நவராத்திரியில் வரும் தசமி தினமான விஜயதசமி தினத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற எந்தச் செயலும் வெற்றிகரமாக முடியும் என்பது ஐதீகம். அதாவது, சிறுவர்களுக்கு ஏடு தொடங்குதல், புதிய நிறுவனங்களை ஆரம்பித்தல், புதுக் கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் இயல்-இசை-நாடகம் போன்ற கலைகள் விருத்தியடைய வழிபடுதலாலும் நன்மைகள் கிடைக்கின்றன. நவராத்திரி விழாவானது, இந்துக்களின் பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவற்றை பிரதிபலிக்கும் விழாவாக தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. நவராத்திரி விரதத்தை மேற்கொள்பவர்களுக்கு கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்று பலன்களுடன் அனைத்து வளமும் நலமுடனே வந்து சேரும்.


வெல்லுங்கள்

விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 16.10.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




18.09.2013 'Top News' கேள்விக்கான விடை: 97%

ipod பரிசை பெறுபவர் :
எம்.இஸ்ரத்,
268/1, மோதரை,
மொரட்டுவை.

விஜய் – TOP NEWS
இவ்வார கூப்பன் (09.10.2013)

விடை: ..................
பெயர்: ..................
வீட்டு முகவரி: ..................
..................
பாடசாலை முகவரி: ..................
..................
வயது: ..................
தொ.பே.இல: ..................

அனுப்ப வேண்டிய முகவரி:
iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பணி

உலகின் அனைத்துத் தொழில்களுக்கும் அடிப்படையானது ஆசிரியர் தொழிலாகும். ஆசிரியர் பணி மகத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. ஆசிரியர் என்றால் குற்றம் நீக்குபவர் என்று பொருள்படும். அதற்கேற்ப, அவர் மாணவர்களின் குற்றம் கலைந்து அவர்களைப் புடம் போட்ட மாணிக்கங்களாக்குகிறார். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குகின்றார். பழங்காலந்தொட்டு ஆசிரியப் பணிக்கு பெருமதிப்புண்டு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற தொடரில் குருவுக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுத்துள்ளனர்.

ஆசிரியர்கள் இல்லாவிட்டால் மனிதவாழ்வே இருள் சூழ்ந்ததாயிருக்கும். ஒரு நாட்டுக்குத் தேவையான வைத்தியர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், சட்டவல்லுனர்கள், பேராசிரியர்கள், ஆட்சித் தலைவர்கள் அனைவரையும் உருவாக்கித் தருவோர் ஆசிரியர்களே. மற்றோரின் உயர்வுக்குக் காரணமான ஆசிரியர்களை ஏணிக்கும் தோணிக்கும் உவமிக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளரினதும் பணி அவர்களது தொழிலுடன் முடிந்துவிடுகிறது. ஆனால், ஆசிரியரின் பணி பாடசாலைக்கு வெளியிலும் தொடர்கிறது. ஆசிரியர் மாணவருக்கு பெற்றோராகவும் நண்பராகவும் வைத்தியனாகவும் நீதிபதியாகவும் ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.

ஒரு நல்லாசிரியருக்கு நிலம், மலை, தராசு, மலர் என்பன உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. அவர் நிலம் போலப் பொறுமையுள்ளவராகவும் மலை போல சமூகத்தில் உயர்ந்தவராகவும் தராசு போல நீதியுடையவராகவும் மலர் போல மென்மையானவராகவும் விளங்கவேண்டும். ஆசிரியர் அதிக நூல்கள், பத்திரிகைகளை வாசித்து உலக அறிவுடையவராகவும் விளங்க வேண்டும்.



ஆசிரியரிடம் பேச்சாற்றல் இருந்தால்தான் மாணவர் புரியும்படி விளங்கப்படுத்த முடியும். ஆசிரியர் சமயபக்தி உள்ளவராகவும் இருக்கவேண்டும். ஆசிரியரின் நடை, உடை, பாவனை அத்தனையும் சிறந்ததாய் இருக்க வேண்டும். ஆசிரியரின் முன் மாதிரி மாணவரைப் பாதிக்கும். சமூகத்துக்கு சேவையாற்ற ஆசிரியர் பணி போன்று வேறொன்றில்லை.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் பணி புரியும் ஆசிரியர்களை மதித்து வாழ்த்தும் ஒரு நாளாக ஒக்டோபர் 6 ஆம் திகதியை நாம் ஆசிரியர் தினமாக அனுஷ்டிக்கிறோம். ஆசிரியர்களை மாணவர்கள் மதித்தால்தான் அவர்களின் அறிவு மாணவர்களை வந்து சேரும். அவர்கள் வழங்கும் சிறு தண்டனைகள் நம்மைத் திருத்த எடுக்கும் அன்புத் தண்டனை கள் ஆகும். ஆசிரியர்களின் குறைகளை அரசாங்கமும் சமூகமும் நிறைவு செய்ய முன்வர வேண்டும். அப்போதே அவர்களால் தம் பணியை மனப்பூர்வமாகச் செய்யமுடியும்.

ஆர்.ஏ.ஏ.அஷ்பக்,
ரோயல் கல்லூரி, கொழும்பு-07.

# வாசிப்பு



*ஒருநாள் வந்தது உலகம் சிரித்தது*
*மறுநாள் வந்தது உலகம் வியந்தது*
*மனிதன் வந்தான் மூச்சை அறிந்தான்*
*அம்மூச்சு சொன்னது வாசிப்பென்று!*

*மிருகத்தின் உயிர் சுவாசிப்பு*
*மனிதனின் உயிர் வாசிப்பு*
*வாசிப்பை நீ நேசித்தால்*
*உலகம் உன்னை சுவாசிக்கும்!*

*வாசிப்பு இருந்தால் நீ முழு மனிதன்- அது*
*இல்லாவிட்டால் நீ அரை மனிதன்*
*வாசிப்பை உன் உயிர் மூச்சாக்கு*
*உன் எதிர்காலத்தை நீ வளமாக்கு!*

ஏ.எச்.பாத்திமா அஃப்ரின்

## சூற்றாடல் தொகுப்புகள் சில...

- இருளை நாடும் பிராணி - நத்தை
- கறையானால் அரிக்கப்படாத தாவரம் - தேக்கு, வேம்பு
- பல்லி முட்டையின் நிறம் - வெள்ளை
- பின்னோக்கிப் பறக்கக்கூடிய பறவை - ஹம்மிங் பேட்
- பூனை விரும்பி உண்ணும் செடி - குப்பைமேனி

எம்.டபிள்யூ.எப்.ஸாரா,
அல்-முபாரக் தே.பாட.,மல்வானை.





# சிறிய தவறு

ஜெயராமும் கார்த்தியும் நண்பர்கள்.வகுப்பில் ஜெயராமுக்கும் கார்த்திக்கும் சிறிய சண்டை ஒன்று ஏற்பட்டது. தவறு ஜெயராம் மீதுதான். அதனால், இருவரும் பேசிக்கொள்ளவில்லை. இரண்டு நாட்களாகவே தனியாகப் பாடசாலை செல்லும் கார்த்தியிடம் காரணம் கேட்டார் அம்மா. அவன் நடந்ததைக் கூறினான்.

“எனது கணித புத்தகத்தை ஜெயராம் ஒருநாள் வாங்கிக்கொண்டு போனான். மறுநாள் பாடசாலைக்கு புத்தகத்தைக் கொண்டுவர மறந்துவிட்டான். அதனால், கணித வகுப்பு முழுவதும் நான் வெளியில் நின்றேன். செய்யாத பிழைக்குத் தண்டனையை அனுபவித்த கோபத்தில் அவனைத் திட்டினேன். அதிலிருந்து அவன் என்னுடன் பேசுவதில்லை. நானும் பேசவில்லை” என்றான் கார்த்தி.

“உன்னுடைய நண்பன்தானே! விட்டுக்கொடுத்துப் போகக்கூடாதா?” என்றார் அம்மா. “தவறு செய்த அவனே என்னிடம் பேசாமல் இருக்கும்போது, நான் ஏன் அவனிடம் பேச வேண்டும்?” என்று எதிர்க்கேள்வி கேட்டான் கார்த்தி.

“சரி, உங்களது சண்டையைப் பிறகு பார்க்கலாம். நாளைக்கு உன் தாத்தா, பாட்டி வருகிறார்கள். பரண் மேலே போட்டு வைத்திருக்கும் பாத்திரங்களை எடுத்துக்கொடு நாளைக்குத் தேவைப்படும்” என்றார் அம்மா.



கதிரை ஒன்றைப் போட்டு, அதன்மேல் ஏறி நின்று ஒவ்வொரு பாத்திரமாக எடுத்துக் கொடுத்தான் கார்த்தி.

“ஐயோ! பாத்திரமெல்லாம் ஒரே தூசியாய் இருக்கிறது இப்போது என்ன பண்ணுவது?” என வருத்தம் மேலிடக் கேட்டார் அம்மா.


“இதில் என்னம்மா பிரச்சினை? தூசியைத் துடைத்துவிட்டு, கழுவிப் பயன்படுத்த வேண்டியதுதானே!” என்றான் கார்த்தி.

“அதே மாதிரித்தான் உன் நல்ல நண்பன் தூசியைப் போல சிறிய தவறு செய்துவிட்டான். அதை மன்னித்துப் பேச வேண்டியதுதானே!” என்றார் அம்மா.

கார்த்திக்குத் தனது தவறு விளங்கியது. “சரியாகச் சொன்னீர்கள் அம்மா! சிறிய தவறுக்காக நல்ல நண்பனை இழக்க இருந்தேன். இப்போதே ஜெயராம் வீட்டுக்குப் போய் வீட்டுப் பாடம் எல்லாம் செய்துவிட்டு வருகிறேன்” என்றபடி உற்சாகமாக ஓடினான் கார்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.54




**மேலிருந்து கீழ்**

01. புன்முறுவல்.
02. சுவடு. (தலைகீழ்)
03. 'உயர்வு' என்பதன் எதிர்ப்பதம்.
04. கணவன். (தலைகீழ்)
06. கரும்பு. (தலைகீழ்)
08. உபவாசம். (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. அங்கலாய்த்தல்.
02. தவம் செய்பவர். (மாறியுள்ளது)
03. '..... ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பது பழமொழி.(மாறியுள்ளது)
04. விளக்கில் நெருப்பு பற்றவைக்கப்படுவது. (மாறியுள்ளது)
05. வெற்றிக்குக் கிடைப்பது.
07. புகைத்தலால் வரும் ஒருவகை நோய்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.53 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | கி | ல | ம் | | 2 கு |
| ச் | | | ல | | டை |
| 3 ச | ம் | ப | வ | ம் | |
| ம் | 4 த | | 5 அ | ன | ல் |
| | 6 பா | வி | | 7 வ | லி |
| | | 8 அ | ணு | 9 ப | 10 வி |

## உங்களுக்குத் தெரியுமா? 5



இது இலங்கையிலுள்ள ஒரு தேசிய வனமாகும். சப்ரகமுவ மாகாணம் மற்றும் தென் மாகாணத்திற்குட்பட்ட சில பகுதிகளில் இது பரந்து காணப்படுகின்றது. 1988 ஆம் ஆண்டிலிருந்து யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமைத் தளமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 34.22 சதுர மைல் நிலப்பரப்பில் பரந்துள்ள இக்காடானது, இலங்கையிலுள்ள காடுகளில் உயிர்ப்பல்வகைமை செறிந்து காணப்படும் ஒரு மழைக்காடாகும். இங்கு ஆண்டுக்கு சராசரியாக 2,500 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. ஆண்டுக்குரிய சராசரி வெப்பநிலை 23.6 செல்சியஸ் ஆகும்.

* இதன் பெயர் யாது? ...........................................

## அறிவுக்கு விருந்து - 435 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**



**போட்டி: 04**

1. ஒரு தவறு
2. குழந்தை அழுதது
3. நாளை வரும்
4. ஒவ்வொன்றாய் மலர்ந்தது

**போட்டி: 05**

1. உயிர் எழுத்துக்கள் - 12
2. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று - மணிமேகலை
3. உயிர்கள் வாழும் கோள் - புவி
4. தானிய வகைகள் இரண்டு - பயறு, சோளம்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 435 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.ஷாமா, அநுராதபுரம்.

**போட்டி: 02**
என்.லகேந்திரன், புத்தளம்.

**போட்டி: 03**
பாத்திமா கலீல், அலவத்துகொட.

**போட்டி: 04**
ஏ.உஸ்மான், திருகோணமலை.

**போட்டி: 05**
யோ.நாகேந்தினி, நாவற்சோலை.

**பாராட்டுப் பெறுவோர்:**

* மேரி பிபியானா, முத்தரிப்புத்துறை.
* ஆர்.துலக்ஷனா, நோர்வூட்.
* எம்.பஸால், அலுவிஹாரை.
* அன்ரன் நிஷான், சில்லாலை.
* பி.டோரியாஸ், திருகோணமலை.
* ஏ.அப்துர் ரஹ்மான், ஹந்தெஸ்ஸ.
* என்.லக்ஷிகா, சுண்டுக்குளி.
* டபிள்யூ.ஸல்மா, ஹப்புகஸ்தலாவ.
* இல்மா இத்ரீஸ், அக்குறனை.
* வி.துவாரகி, சாவகச்சேரி.

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1





## எதிர்ப்பாற் சொல் தருக 4

1. சீமான் - ...........................
2. மாணவி - ...........................
3. பூட்டி - ...........................
4. இடையன் - ...........................
5. பிக்கு - ...........................





தயாரிப்பு - ஸாரா


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.10.16 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 438
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## இடைவெளிகளை நிரப்புக 2




## பொருத்தமான படத்துடன் இணைக்க 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...




## ஆண்ட்வான் வாட்டோ (1684-1721)

ஜீன்-ஆண்ட்வான் வாட்டோ எனும் இயற்பெயரை உடைய பிரான்ஸ் நாட்டு ஓவியரான இவர், 1684 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி பிரான்ஸின் வெலன்சியன்ஸ் தன்னாட்சிப் பகுதியில் பிறந்தார். இவர், சிறு வயதிலேயே ஓவியம் வரைவதில் அதிக ஈடுபாடு காட்டினார்.

இவரால், ஓவியத்தில் நிறம் மற்றும் அசைவு என்பன தொடர்பில் மறுமலர்ச்சி ஏற்பட்டதாகவும் பரோக் பாணியில் ஓவியங்கள் வரைவதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதுவே, பிற்காலத்தில் தீவிரத்தன்மை குறைந்த, இயற்கைத்தன்மை கூடிய, சம்பிரதாயங்கள் குறைந்த 'ரோக்கோகோ' பாணி உருவாக வழியமைத்ததாகக் கூறப்படுகின்றது.

ஆண்ட்வான் வாட்டோ, ஓவியக்கலையில் புகழ்பெற்ற அதேவேளை, கட்டடக்கலையிலும் சிறந்து விளங்கினார். நுண்மையான இசைக்கலைஞர், இத்தாலிய நகைச்சுவை, இடையர்கள், gilles, the foursome, the charms of life, சிதேரா தீவுக்கு ஒரு யாத்திரை, பிரெஞ்ச் நகைச்சுவை நடிகர்கள் உட்பட, பல்வேறு ஓவியங்களை வரைந்து புகழ்பெற்ற இவர், 1721 ஜூலை 18 ஆம் திகதி, தனது 36 ஆவது வயதில் பிரான்ஸில் உயிரிழந்தார்.

-ஜீநு



the charms of life



சிதேரா தீவுக்கு ஒரு யாத்திரை




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு






சதுர்சன்,
விக்னேஸ்வரா ம.வித்.,
சிவலோக சமாயம்.



ஜி.கவிஷா,
டயகம மேற்கு இல-1 த.வித்.,
டயகம.





எம்.அயாஸ்,
அல்-அஸ்ரக் மு.ம.வித்.,



வி.லக்ஷிகன்,
இந்து ஆரம்பப் பாட.,
யாழ்ப்பாணம்.



எஃப்.ராபியா,
சுலைமானி மத்.கல்.,
கன்னத்தோட்டை



ரஹிம்,
அல்-அஸ்ராக் ம.வித்.,
தல்கஸ்பிடிய

டி.டிறைக்ஷன்,
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.




நா.கிருதார்த்தன்,
வவுனியா த.ம.ம.வித்.,
வவுனியா.



ச.பிருந்தா,
ஹைலன்ஸ் கல்.,
ஹட்டன்.



ஜெ.யுகாஞ்சலி,
விபுலானந்தாக் கல்.,
வவுனியா.



எம்.சிவதர்ஷன்,
சென்மேரிஸ் மத்.கல்.,
பொகவந்தலாவ.



ஜோ.சாலினி மதுஷிக,
கட்டபுலா த.வித்., கட்டபுலா.



கண்டி அம்பிடியைச் சேர்ந்த ஜோசப்-ஜெஸ்மின் தம்பதியரின் செல்வப் புதல்வன் மாக், தனது பிறந்தநாளை 01.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஜூட்)



மட்டக்களப்பு பற்றிமாகிரி வீதியைச் சேர்ந்த கருணாகரன்-மெலோனி தம்பதியரின் செல்வப் புதல்வன் டைலன், தனது பதினொராவது பிறந்தநாளை 02.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எவான் புளோரியன்)

விஜய்
'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த தியாகராஜா-சிவமலர் தம்பதியரின் செல்வப் புதல்வி சந்தியா, தனது நான்காவது பிறந்தநாளை 05.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ரெ.றொசான்)



மட்டக்களப்பு மாங்காட்டைச் சேர்ந்த கலியுகவரதன்-தேவகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வி யதுர்ஷா, தனது மூன்றாவது பிறந்தநாளை 12.10.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கட்டுப்பிள்ளையார் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: சி.சதுர்ஷா)



சாய்ந்தமருதைச் சேர்ந்த ரஸாக்-ரிஸ்வானா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஆஷிக் இலாஹி, தனது மூன்றாவது பிறந்தநாளை 27.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: சிப்னாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்




















(தொடரும்)

# உயிரியல் வகைப்பாடு



**பூக்கள் மரங்கள் பழங்கள் தானியங்கள் கீரைகள் போன்ற தாவரவியல் அம்சங்கள் தொடராக விஜய்யில்...**

அழிந்துபோன மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உயிரினங்களை வகைப்படுத்தலை, 'அறிவியல் வகைப்பாடு' (Scientific Classification) அல்லது 'உயிரியல் வகைப்பாடு' (Biological Classification) என உயிரியலாளர்கள் குறிப்பிடுஷிகிறார்கள். கெரோலஸ் லின்னேயஸ் (Carolus Linnaeus) என்பவர் உயிரினங்களை அவற்றின் பொதுவான இயற்பியல் தோற்றத்தின் (Physical Characteristics) அடிப்படையில் குழுக்களாக வகுத்துள்ளார். இதுவே தற்கால அறிவியல் வகைப்பாட்டின் தொடக்கம் எனலாம். டார்வினுடைய பொது மரபுவழிக் கொள்கை (Principle of Common Descent) ஏற்றுக்கொள்ளப் பட்டபோது, அதற்கமைய கெரோலஸ் லின்னேயஸின்






வகைப்பாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மூலக்கூற்றுத் தொகுப்பியலின் (Molecular Systematics) பயன்பாட்டினால் அண்மைக் காலத்திலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தற்கால வளர்ச்சிகள்

1960 களிலிருந்து, வகைப்பாட்டு அலகுகளை படிவளர்ச்சி அமைப்பில் ஒழுங்குபடுத்தும் புதிய முறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வகைப்பாட்டு அலகு, ஏதாவது உயிரின மூதாதையின் அனைத்து வழித்தோன்றல்களையும் கொண்டிருப்பின், அது 'ஒருவழித் தோற்றம்' (Monophyletic) எனப்படுகின்றது. மாறாக, மிகக் கிட்டிய பொது மூதாதை ஒன்றைக் கொண்டிருந்து, அனைத்து வழித்தோன்றல்களையும் கொண்டிராவிட்டால், அது 'Paraphyletic' எனப்படுகின்றது. வகைப்பாட்டு அலகொன்றில் அடங்கும் உயிரினங்களின் பொது இயல்புகள் தனித்தனியாக, ஒன்றுக்கொன்று தொடர்பின்றிக் கூர்ப்பு அடைந்திருப்பின் அவ்வலகு, 'பல்தொகுதி முறைத் தோற்றம்' (Polyphyletic) எனப்படுகின்றது. அந்தவகையில், லின்னேயஸ் உயிரினங்களை ஒரு படிமுறை அமைப்பில் வகுத்தார். இவரது வகைப்பாட்டில் ஐந்து படிநிலைகள் அமைந்திருந்தன. அவை;

*திணை (ராச்சியம்)* (Kingdom)
வகுப்பு (class)
வரிசை (order)
பேரினம் (genus)
இனம் (species)

இதில் ராச்சியங்கள், ப்ளான்டே (Plantae- தாவரங்கள்),அனிமேலியா (Animalia- விலங்குகள்) என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தன. இவ் ராச்சியங்கள் ஒவ்வொன்றும் வகுப்புகளாகவும், வகுப்புகள் வரிசைகளாகவும், வரிசைகள் பேரினங்களாகவும், பேரினங்கள் இனங்களாகவும் வகுக்கப்பட்டன. அதன்பின்னர், லின்னேயஸ் ஐந்து படிகளுடன் மேலும் இரண்டு படிகளைச் சேர்த்துத் தற்கால வகைப்பாட்டின் ஏழு படிநிலைகளை அமைத்தார். அதன்படி,

*திணை (ராச்சியம்)* (kingdom)
தொகுதி (phylum), (பிரிவு -division)
வகுப்பு (class)
வரிசை (order)
குடும்பம் (family)
பேரினம் (genus)
இனம் (species)


இதன் அடிப்படையிலேயே தாவரங்கள் மற்றும் விலங்குகள் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, பூக்கள், மரங்கள், பழங்கள், தானியங்கள், கீரைகள் போன்ற தாவரவியல் அம்சங்கள் 'விஜய்' யில் தொடராக வெளிவரவுள்ளது. இந்த வரிசையில் அடுத்தவாரம் முதல் பூக்களின் உயிரியல் வகைப்பாட்டினை எதிர்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஓர் இயற்கை சுவையூட்டி.. உடலுக்கு அத்தியாவசியமான ஒரு கனியுப்பு.. வெள்ளை நிறத்தில் காணப்படும் இதனை, திரவ நிலையிலும் திண்ம நிலையிலும் பயன்படுத்தலாம். அதிகமாகப் பயன்படுத்தினால் தொற்றாத தன்மை கொண்ட நோய்கள் ஏற்படும். அது என்ன என்று தெரியுமா? அதுதான் 'உப்பு'.



# அளவுக்கு மிஞ்சினால் உப்பு நஞ்சாகிவிடும்!



## எமது உணவில் உப்பு சேரும் விதம்

சமைக்காத உணவுகளில் இயற்கையாகவே நூற்றுக்கு 10 சதவீதம் உப்பு அடங்கியுள்ளது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உணவுகளில் 20 சதவீதம் உள்ளது. எஞ்சிய 70 சதவீத உப்பினை நாமே சமைக்கும்போது உணவில் சேர்த்துக்கொள்கின்றோம்.

## இலங்கையில் உப்பின் பயன்பாடு

வயது வந்தவர்களுக்கான நாளாந்த உப்பின் தேவை 5 கிராமாகும். (அதாவது, ஒரு தேக்கரண்டி மட்டுமே). குழந்தைகளுக்கு உப்புத் தேவையில்லை.அதேவேளை, நாம் நாளாந்தம் 12.5 கிராம் உப்பினைப் பயன்படுத்துவதாக அண்மையில் வைத்திய ஆய்வு நிறுவனமொன்று மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இது நாளாந்தம் தேவைப்படும் உப்பின் அளவைவிட இரு மடங்கு அதிகமாகும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழி உங்களுக்குத் தெரிந்திருக்கும். உப்பின் பயன்பாடும் அவ்வாறுதான். அளவுக்கு மிஞ்சினால் அது பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

## அதிகம் பயன்படுத்தினால்...

அதிக உப்பின் பயன்பாடானது, தொற்றாத நோய்கள் பலவற்றுக்குக் காரணமாக அமைவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் நிரூபணமாகியுள்ளது. நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், எலும்பு சம்பந்தமான நோய்கள், கல்லீரல் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, சிறுநீரகக் கற்கள், அதிக உடற் பருமன் ஆகிய நோய்கள் அதிக உப்பின் பயன்பாடு காரணமாக ஏற்படுகின்றன. குறிப்பாக, எமது நாட்டில் அதிக உப்பு பாவனையினால் நாட்டு மக்களின் ஆரோக்கியம் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது கவலைக்குரிய விடயமாகும்.



## நீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான உலக செயற்பாட்டு வலையமைப்பு (WASH)

உலக நீர்ப்பாவனை, மக்கள் சுகாதாரம் மற்றும் மக்களின் ஆரோக்கிய நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்துடனும் செயலாற்றும் 'WASH' அமைப்பானது, 2005 இல் நிறுவப்பட்டது. இந்த அமைப்பானது, உப்பு நுகர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் உப்பின் பயன்பாட்டினைக் குறைத்து, உலக மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது குறித்தும் பிரதான திட்டங்களை வகுத்துள்ளது.

உணவு உற்பத்தியினை மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்களிடம் உப்பின் பயன்பாட்டைக் குறைக்குமாறு வலியுறுத்தல், உலகம் முழுவதும் உள்ள நாடுகளுடன் இணைந்து ஆகக் குறைந்த உப்பு பயன்பாட்டிற்கான அரசக் கொள்கைகளை வகுத்தல் என்பன தொடர்பில் WASH அமைப்பு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. 2025 ஆம் ஆண்டளவில், உலக உப்பு பாவனையினை நூற்றுக்கு 30 சதவீதமாகக் குறைப்பதே இந்த அமைப்பின் நோக்கமாகும். இந்த அமைப்பில் இதுவரை 85 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய வலய நாடுகளான இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகியவை இந்த WASH அமைப்பில் இடம்பிடித்துள்ளன.



## ஏனையவர்களுக்கு வழிகாட்டியாவோம்

உப்பின் பயன்பாட்டினைக் குறைத்தால் சிறந்த பலனைப் பெற முடியும். இதனை ஒரு பழக்கமாகவும் மாற்றிக்கொள்ளலாம். வீடுகளில் சமைக்கப்படும் உணவுகளின் உப்புச் சுவை எவ்வாறிருக்கும் என்பதனை நாம் அறிவோம். உப்பின் அளவு அதிகமாயின் அதனைக் குறைக்கவும் குறைந்தளவு உப்புப் பாவனையாயின், அதனை அவ்வாறே முன்னெடுக்கவும் நாம் உடந்தையாக இருக்க வேண்டும்.

## இந்த பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவோம்

✱ உணவுகளை சமைக்கும்போது, உப்பைக் குறைத்துப் பயன்படுத்துங்கள். சோற்றுக்கு உப்புச் சேர்க்க வேண்டாம்.

✱ உப்பின்மூலம் உணவின் சுவையைக் கூட்டாமல், அதற்குப் பதிலாக இயற்கைச் சுவையூட்டிகளை (கறுவா, கறிவேப்பிலை, றம்பை, கிராம்பு, ஏலம் என்பன) சேருங்கள்.

✱ துரித உணவுகள் (Fast Foods) மற்றும் ஏற்கனவே சமைத்து வைக்கப்பட்டுள்ள உணவுகள் என்பனவற்றில் சோடியம் அதிகமாக உள்ளது. ஆகவே, அவற்றின் பயன்பாட்டினைக் குறையுங்கள். (உதாரணமாக: அச்சாறு, ஊறுகாய், சட்னி, சோஸ், செலட் கிறீம், மஸ்டட் கிறீம்). அதேவேளை, தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகளிலும் உப்பு அதிகமாக உள்ளது.

✱ உப்பு அதிகமுள்ள துரித உணவுகளுக்குப் பதிலாக புதிய இறைச்சி, மீன் வகைகள், காய்கறிகள், பழங்கள் என்பனவற்றை உண்பதற்குப் பழகிக்கொள்ளுங்கள்.

✱ அதிக உப்புப் பாவனை என்பது நாமாகவே உருவாக்கிக்கொண்ட ஒரு பழக்கமாகும். அதனால், இந்த பழக்கத்தை மாற்றிக்கொள்ள நம்மால் நிச்சயமாக முடியும். ஆகவே, உப்பைக் குறைத்து உணவுகளின் இயற்கை ருசியினை சுவைக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
சாரணர் உலகம்

# 15 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1983

15 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1983
கெனடா


15,000 சாரணர்கள்

கிட்டத்தட்ட 100 நாடுகள்




Kananaskis Alberta


ஜூலை 6-14



பதினைந்தாவது உலக சாரணர் ஜம்போரி 1983 ஆம்



ஆண்டு கெனடா நாட்டில் Alberta, Kananaskis Country என்ற இடத்தில் நடைபெற்றது. இதில் 15,000 சாரணர்கள், கிட்டத்தட்ட 100 நாடுகளில் இருந்து வந்து ஒன்றுகூடிக் கொண்டாடினர். இந்த பதினைந்தாவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கம் 'The Sprit Lives' என்று அறிவிக்கப்பட்டது. சாரணர் இயக்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையும், சாரணர் தந்தை பேடன் பவலின் 125 ஆம் ஆண்டு



பிறந்தநாள் நினைவு தினத்தையும் கொண்டாடி மகிழ்ந்தனர்.
ஜம்போரியின் நிகழ்வுகள் அந்த இடத்தில் அமைந்திருந்த மேற்குப் பக்க மலைத் தொடரில் நிகழ்ந்ததால் அது சாரணர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தின என்று கூறலாம்.

### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பஹ்ரைன் | 2,301 | 1970 | 1953 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

# கில்வெல் சந்திப்பு




'சாரண தலைவர், தலைவியர் ஒன்றியத்தினால் காலி லபுதுவ சிரிதம்ப வித்தியாலயத்தில் கில்வெல் (Gilwell) நட்புறவு







சந்திப்பு சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. காலி மாவட்ட சாரணர் அமைப்பின் மாவட்ட ஆணையாளர் நிஹால் குருசிங்ஹவின் வழிநடத்தலிலேயே மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இலங்கையின் ஏராளமான பிரதேசங்களைச் சேர்ந்த சாரண தலைவர், தலைவியர் இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுகள் திருப்தி தரும் வகையில் வெற்றிகரமாக நடைபெற்றதாக சாரணர் அமைப்பின் பிரதம ஆணையாளர் நிமல் சில்வா அவர்கள் தெரிவித்துள்ளார்.

# முகாம் அமைக்கையில் இதனையும் கையாளலாம்

சாரண முகாம் அமைக்கவென வெளிப்புற இடங்களுக்குச் செல்கையில் சாரணர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமாகும். அந்தவகையில், முகாமில் பாதுகாப்பான ஆரோக்கியமான பாத்திர இராக்கை, குடிநீர் தாங்கியை வைக்கக்கூடிய இடம் என அமைவிடங்கள் உரிய வகையில் அமைக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அவ்வாறான சில வழிமுறைகளைப் பார்ப்போம்.

1. பருகும் நீரானது, வடிகட்டப்பட்டு சுத்தமாக்கப்பட்டு அருந்தினால் உடல் ஆரோக்கியத்தைப் பேண முடியும். நீங்களும் முகாம் அமைக்கையில்



அவ்வாறான நீர்வடிகட்டியை பெற்றுக்கொள்ளுங்கள்.

2. சாரணர்கள் அணிகின்ற காலுறைகள் (சொக்ஸ்) கழுவப்பட்ட பின்னர் அவற்றை உலரவிடுவதற்கான இராக்கை (ஸ்டேன்ட்) ஒன்று





அமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

அதன் அருகாமையில் சப்பாத்து பொலிஷ் செய்யும் பிரஷ்களை வைப்பதற்கான ராக்கையும் சப்பாத்துக்களை வைப்பதற்கான இராக்கையும் காணப்படுகின்றன.

3. குடிநீர் தாங்கி (Tank) தரையில் உரசாதவாறு பாக்கு மரக்குற்றிகளின் மீது வைக்கப்பட்டுள்ளது. பாக்கு



மரக்குற்றிகளின் மேல்புறத்தில் அரைப்பாதிக் கட்டை வெட்டப்பட்டிருப்பதன்மூலம் நீர் தாங்கியை அதன்மீது சறுக்காதவாறு நிறுத்தி வைக்கமுடியும்.

4. முகாமில் உணவு தயாரிப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை அடுக்கி வைப்பதற்கென மூங்கிலில் அமைக்கப்பட்ட தெப்பம் வடிவிலான கட்டுமான



மொன்றை செய்யலாம். பூச்சி, புழுக்கள் பாத்திரங்களினுள் செல்வதை இதன்மூலம் தடுக்கலாம்.

5. முகாம் சாரணர்களுக்கான குடிநீரைப் பாதுகாப்பான



கூடாரமொன்றினுள் வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் சமாதான விருதினை வென்ற மலாலாவின் பதிவுகள்

மலாலா யுசுப்ஸாய் பாகிஸ்தானில் பிறந்தவராவார். தலிபான் அமைப்பினால் தனக்கும் இதர முஸ்லிம் மாணவிகளுக்கும் கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து BBC இணையத்தள சேவையொன்றிற்கு கருத்துத் தெரிவித்திருந்தார். 2009 ஆம் ஆண்டிலேயே இந்த கருத்தினை அவர் கூறியிருந்தார். அப்போது அவருக்கு வயது 11. அன்று தொடக்கம் உலக ஊடகங்களின் பார்வை இவர்மீது பதியத் தொடங்கியது. நியூயோர்க் டைம்ஸ் சேவையில் இவர் குறித்தான முழு விவரணமொன்று வெளியாகியதையடுத்து இவர் மீதான உலகின் பார்வை இரு மடங்காய் அதிகரித்தது. இதனையடுத்து அவர் சர்வதேச சிறுவர் சமாதான விருதிற்கு தெரிவுசெய்யப்பட்டார்.





தலிபான் அமைப்பிற்கு எதிரான இவரது கருத்துக்களின் காரணமாக 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதியன்று இவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார். எனினும், தீவிர சிகிச்சையின் பின்னர் மலாலாவின் உடல்நிலை தேறியது மட்டுமல்லாமல், தொடர்ந்தும் தனது கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வந்தார்.




மலாலாவின் 16 ஆவது பிறந்ததினம் கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதியாகும். இந்த பிறந்த தினமானது, விசேடமான ஒரு நாளாக அமைந்துவிட்டது. அதாவது, ஐ.நா. சபையினால் மலாலாவின் சார்பாக விசேட மாநாடொன்று கூட்டப்பட்டதுடன், அந்த மாநாட்டில் உலகை நோக்கி உரையாற்றுவதற்கு அவருக்கு வாய்ப்பும் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி, ஐ.நா. சபை உறுப்பினர்களுடன் இந்த மாநாட்டில் இணைந்துகொள்ளக்கூடிய அருமையான வாய்ப்பாகவும் அது அமைந்தது.

இவை அனைத்தினதும் பிரதிபலனாக சில தினங்களுக்கு முன்னர் மலாலா சர்வதேச சிறுவர் சமாதான விருதினை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## குட்டித் தகவல்கள்



பிரான்ஸின் Spot எனப்படும் செயற்கைக் கோளானது, 26 நாட்களுக்கு ஒரு தடவை நீங்கள் பயணம் செய்கின்ற ஒவ்வொரு பாதையையும் பின்தொடர்ந்து (கண்காணித்து) புகைப்படம் பிடிக்கின்றதாம்.



புவியிலிருந்து சூரியனுக்குள்ள தூரம் 150,000,000 கி.மீற்றர்களாகும். ஒளியின் வேகம் செக்கனுக்கு 300,000 மீற்றர்களாகும். ஆனாலும், சூரியனிலிருந்து புவியை நோக்கி ஒளிக்கதிர் பயணிப்பதற்கு 8 நிமிடங்கள் தேவையாகின்றதாம்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 09, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org